பக்கங்கள்:-27

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 19 | வியாழக்கிழமை | 01.05.2025 | அதிர்வு 270

## எரிபொருள்களின் விலை குறைப்பு!

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் எரிபொருள்களின் விலையில் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி, ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 12 ரூபாவால் 06



## இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மீளாய்வு சாதகமாகக் கருத்தில்கொள்ளப்படும்!

### ஜனாதிபதியிடம் ஐரோப்பிய ஒன்றியக் குழு உறுதி

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மீளாய்வு சாதகமான முறையில் கருத்தில்கொள்ளப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிரிவுக்கான தலைவர் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் 07



# வடக்கில் 5,940 ஏக்கர் நிலத்தை அரசு இரகசியமாகக் கபளீகரம்!

### சத்தம் சந்தடியின்றி வெளியானது வர்த்தமானி

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் மருதங்கேணி முதல் முள்ளிவாய்க்கால் வரை யாழ்ப்பாணம் மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் ஆகியவற்றின் பெரும்பாலும் கடற்கரையோரப் பிரதேசங்களை அண்டி 5 ஆயிரத்து 940 ஏக்கர் நிலம் அரச உடமையாக்கப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகத்தால் சத்தம் சந்தடியின்றி வெளியிடப்பட்டுள்ளது. 06

## ஜே.வி.பிக்கு வாக்களித்து ஏமாந்த தமிழ் மக்கள் இம்முறை தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களிப்பார்கள்

### இப்படி நம்பிக்கையுடன் சித்தார்த்தன் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

"கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பிக்கு வாக்களித்து ஏமாந்து விட்டோம் என்ற ஆதங்கத்திலேயே தமிழ் மக்களும் தற்போது இருக்கின்றார்கள். அதனால் இம்முறை தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்து தமிழர்களையே தெரிவு செய்வார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்."

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து 06




அரசியல் உரிமைகளைப் பிரயோகிக்க முடியாத உயர் பதவியில் இருக்கும் – இருந்த – அரச ஊழியர் ஒருவர் முறையாகப் பதவி விலகாமல், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு யாழ்ப்பாண மாவட்டநாடாளுமன்ற உறுப்பினராகி உள்ளார் எனத் தெரிவித்து ஒரு வழக்கு உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

அடுத்த மாத முற்பகுதியில் அது விசாரணைக்கு வரும்போது சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி நேரும் என்று சட்ட வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

இந்தப் பின்புலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் இதே போன்ற சிக்கலில் மாட்டியிருக்கின்றார் எனத் தெரிகின்றது. முறையான கால நேரத்தில் முறையான அனுமதி பெறப்படாமை போன்ற சில குளறுபடிகள் இருக்கின்றன எனத் தெரிகின்றது. இவை தொடர்பில் நமது செய்தியாளர் கிண்டத் தொடங்கி இருக்கிறார். விரைவில் விடயங்கள் வெளிவரும். அப்போது சம்பந்தப்பட்டோருக்கு 06




# மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான அலுவலகத்துக்கு 5, 6 ஆம் திகதிகளில் பூட்டு

உள்ளூராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான அலுவலகம் எதிர்வரும் 05 ஆம், 06 ஆம் திகதிகளில் மூடப்படும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தினத்தன்று, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தை வாக்களிப்பு நிலையமாக மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் சட்டங்களை மீறிய 33 வேட்பாளர்கள் கைது

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில், 33 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதியிலிருந்து நேற்று காலை வரையான காலப்பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்த காலப்பகுதியில் கட்சிகளின் ஆதரவாளர்கள் 349 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வவுனியா பூந்தோட்டம் பகுதி மக்களுக்கு வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவரின் மூலம் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த அஞ்சல் பணியாளர் ஒருவர் வவுனியா பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், மேற்படி வர்த்தக நிலைய உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 6.5 பில்லியன் டொலராக அதிகரிப்பு

மார்ச் மாத இறுதிக்குள் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு 6.5 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.




அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், 2025 மார்ச் மாத இறுதியில் உத்தியோகபூர்வ வெளிநாட்டு இருப்பு 7 பில்லியனை கடக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

# லாஃப்ஸ் எரிவாயு விலையில் மாற்றமில்லை




லாஃப்ஸ் எரிவாயு விலையில் எந்த திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை என லாஃப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோ கிராம் எடையுள்ள லாஃப்ஸ் எரிவாயு கொள்கலனின் விலை 4,100 ரூபாவாகவும், 5 கிலோகிராம் எடையுள்ள லாஃப்ஸ் எரிவாயு கொள்கலனின் விலை 1,645 ரூபாவாகவும் விலை மாற்றமின்றி நிலவும் என தெரிவிக்கப்படுகிறது.




# கனடா தேர்தலில் வெற்றி பெற்றுள்ள லிபரல் கட்சிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் வாழ்த்து

## கனேடியத் தமிழர் பேரவை தெரிவிப்பு

2025 கூட்டாட்சி தேர்தலில் வெற்றி பெற்று அடுத்த கனடா கூட்டாட்சி அரசை அமைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள லிபரல் கட்சிக்குக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட கனேடியத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் கனேடியத் தமிழர் பேரவை தனது இதயப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“மக்களால் வெளிப்படுத்தப்பட்ட நம்பிக்கையை மதித்து, நாட்டின் முன்னேற்றத்திற்குப் புதிய அரசு உறுதியுடன் செயற்படும் என நாம் நம்புகின்றோம்.

இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற கனேடியத் தமிழ் உறுப்பினர்களுக்கும் கனேடியத் தமிழர் பேரவை பெருமிதத்துடன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

கனேடியத் தமிழர் பேரவையின் முன்னாள் சட்ட ஆலோசகரான கரி ஆனந்தசங்கரி மீண்டும் தெரிவாகியுள்ளார். கனேடியத் தமிழர் பேரவையின் முன்னாள் துணைத் தலைவராக இருந்த ஜோனீட்டா நாதன் வரலாற்றுப் பெருமை வாய்ந்த முறையில் முதன்முறையாகப் பொதுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளார். இதனுடன், அனீட்டா ஆனந்த்தும் மீண்டும் பொதுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளார். இந்த வெற்றிகள், கனேடியத் தமிழ்ச் சமுதாயத்தின் அரசியல் ஈடுபாடு மற்றும் பங்களிப்பைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

அரசியல் சார்பற்ற மற்றும் இலாப நோக்கமற்ற அமைப்பாகச் செயற்படும் கனேடியத் தமிழர் பேரவை, புதிய அரசுடன் இணைந்து, அனைத்து கனேடியர்களின் நலன்களையும் முன்னிலைப்படுத்தும் பணிகளிலும் செயற்படத் தயாராக இருக்கின்றது.

புதிய அரசு மக்கள் விருப்பங்களை மதித்து, ஒற்றுமை, சமத்துவம் மற்றும் வளர்ச்சியை முன்னேற்றும் நடவடிக்கைகளை எடுக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

அதேபோல், நாடு எதிர்கொள்கின்ற பொருளாதார மற்றும் அரசியல் சவால்களைத் திறமையாகச் சமாளித்து, கனடாவின் உலகளாவிய நிலையை வலுப்படுத்தி, அனைத்து கனேடியர்களுக்கும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் நடவடிக்கைகளைப் புதிய அரசு எடுக்கும் என நாங்கள் நம்புகின்றோம்.

கனேடியத் தமிழர் பேரவை, புதிய அரசின் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் வலுப்படுத்தும் முயற்சிகளில் தொடர்ந்து உறுதியாகக் கைகோர்க்கும்.” – என்றுள்ளது.






# சில மதுபானசாலைகள் இன்று மூடப்படுகின்றன




மே தினக் கூட்டம் நடைபெறும் பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள மதுபானசாலைகளை இன்று மூடுமாறு மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நாளை மதுபானசாலைகள் மூடப்படும் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் அந்தப் பிரதேசங்களில் காணப்படும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியுள்ள உணவகங்களுக்கு இது பொருந்தாது என மதுவரித் திணைக்களம் தனது அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளது.



# தடுப்புக்காவலில் உயிரிழந்த இளைஞன் தொடர்பில் சாட்சி விசாரணைகளை ஆரம்பிக்க நீதிமன்றம் தீர்மானம்



வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாக கூறப்படும் நிமேஷ் சத்சர என்ற இளைஞனின் மரணம் தொடர்பான சாட்சி விசாரணைகளை எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பிக்கக் கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

இதன்படி, மேற்படி தினத்தில் சாட்சியமளிப்பதற்காக நீதிமன்றில் முன்னிலையாகுமாறு 5 சாட்சியாளர்களுக்கு அழைப்பாணை விடுக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு இதன்போது நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கோரிக்கையை பரிசீலித்ததன் பின்னர் கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னதாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கமைய குறித்த இளைஞரின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு, 3 பேர் கொண்ட மருத்துவ குழாமினால் பிரேதப் பரிசோதனை நடத்தப்பட்டதாகவும், அதன் முதற்கட்ட அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றுக்கு அறியப்படுத்தியுள்ளது.

அத்துடன், பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட மாதிரிகள் தலைமை தடயவியல் மருத்துவ அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, இந்த மரணம் தொடர்பான நீதிமன்ற விசாரணையின் போது 22 சாட்சியாளர்களிடம் இருந்து சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளதாகவும், அவர்களில் 5 சாட்சியாளர்களுக்கு அழைப்பாணை விடுக்குமாறும் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

# ஜி.எஸ்.பி, பிளஸ் வரிச்சலுகையை பெற இலங்கை மீண்டும் விண்ணப்பிக்க நேரும்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி, பிளஸ் வரிச்சலுகைக்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியிருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த வரிச் சலுகையின் மீளாய்வுக்காக இலங்கைக்கு வந்துள்ள தூதுக்குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து அவர் தமது எக்ஸ் பக்கத்தில் இந்த விடயத்தைப் பதிவிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக சலுகை 2027ஆம் ஆண்டுக்குள் நிறைவடையவுள்ளமையினால் ஜி.எஸ்.பி, பிளஸ் வரிச்சலுகைக்கு இலங்கை மீண்டும் விண்ணப்பிக்க நேரும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் "தாம் இரு முறை சரிபார்த்ததாகவும் நீடிப்பைக் கோருவதற்கு எந்த எல்லையும் இல்லை" என்றும் அவர் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டம் ஆகியவற்றில் இலங்கை தற்போது தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடயம் வயிற்றில் புளி கரைத்ததாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

பதவிக்கு வந்து வந்து விட்டமையால், அதிகாரத்தை வைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சமாளித்து, ஆவணங்களை மாற்றும் வாய்ப்பிருப்பதாகவும் தெரிகிறது.

ஆயினும், இதே போன்ற சிக்கலுக்காக வேறு அரசு ஊழியர்கள் சிலர் தற்காலிக வேலை நீக்கத்தில் உள்ளனர். ஒரு சிலர் ஒழுங்கு நடவடிக்கைகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இந்த எம்.பியும் அந்தப் பட்டியலில் சேர வாய்ப்புண்டு. பொறுத்திருப்போம். விடயம் சந்திக்கு - சந்தைக்கு - விரைவில் வரும் என நம்புவோம்.

+ + +

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மூலம் அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை மட்டங்கள் தொடர்பாக வாரம் தோறும் ஊடகங்கள் மூலம் அறிவிக்கப்படும் திட்டத்தின் கீழ், கோதுமை மா தொடங்கி சீனி, பருப்பு, உருளைக் கிழங்கு, வெங்காயம், நெத்தலி, கருவாடு, செத்தல் மிளகாய், முட்டை, ரின் மீன், அரிசி வகைகள், கோழி இறைச்சி, பால் மா வரை பல பொருள்களின் விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்தப் பட்டியலில் உப்பின் விலை இல்லை. அது அத்தியாவசிய உணவு பண்டத்தில் அடங்காதோ என்னவோ....!

ஆயினும் தமிழர்கள் மத்தியில் 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை!' என்ற வாக்கு உள்ளது. அதன்படி என்றும் இல்லாதவாறு உப்பின் விலையை கிலோ 320 ரூபாவுக்கு கொண்டு போய் நிறுத்தி, உப்பிட்டிருக்கும் இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசை மக்கள் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டும். அந்த நினைவை அந்த அரசுக்கு உறுதிப்படுத்தும் விதத்தில் வரும் செவ்வாய்க் கிழமையன்று நடைபெறும் வாக்களிப்பில் மக்கள் புள்ளடி மூலம் நன்கு போட்டு உறுதிப்படுத்தி, உணர்த்துவார்கள் என எதிர்பார்க்கலாம்.

- - - - - - - - - - - - - - -

## ஜே.வி.பிக்கு வாக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அநுர ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும் என்பதை எமது மக்களுக்குக் கடந்த தேர்தலிலும் நாங்கள் கூறியிருந்தோம். அதாவது ஜே.வி.பி., அநுரகுமார, தேசிய மக்கள் சக்தி என்பது எல்லாம் யார் என்றும், இவர்கள் என்ன என்ன செய்வார்கள் என்றெல்லாம் கூறியிருந்தோம்.

அதிலும் அந்தத் தேர்தல் பிரச்சாரத்திற்காக அநுரகுமார எதனைக் கூறினாலும் அவர் எதனையும் நடைமுறைப் படுத்தமாட்டார் என்பதையும் அவ்வாறு நடைமுறைப்படுத்துவது கஷ்டம் என்றும் கூறியிருந்தோம்.

அதைப்போலவே அந்தத் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றவில்லை. ஏனெனில் இதுதான் நடக்கும் என்பது எங்களுக்கு முன்னரே தெரிந்து இருந்தது.

இதனைத்தான் நாங்கள் முன்னர் கூறியபோது கவனத்தில் எடுக்காத தமிழ் மக்கள் பலரும் அதனைத் தற்போது நேரடியாகவே தெரிந்துகொண்டுள்ளார்கள். இதனால் தாங்கள் மிகப் பெரிய ஒரு தவறைச் செய்துள்ளோம் என இப்போது அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ்க் கட்சிக்கு வாக்களிக்க வேண்டியது இன்றைய காலச் சூழலில் மிக அவசியம். ஆகையினால் இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் அதனைச் செய்வார்கள் என நம்புகின்றோம்.

அதனால் பெரும்பான்மையான மக்கள் எமக்கு ஆதரவை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு ஆதரவை வழங்குவதன் ஊடாகவே எமது சபைகளை நாமே ஆள முடியும்.

இதனைவிடுத்து தமிழ் மக்கள் இங்கு சபைகளை அமைக்கத் தவறினால் மீண்டும் பெரும்பான்மையான ஆசனங்களைப் பெற்று ஆளும் கட்சியான ஜே.வி.பி. ஆட்சியமைக்கும் நிலைமை ஏற்பட்டால் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இத்தகைய ஆபத்துக்களை உணர்ந்து முக்கியமான இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்காகத் திரண்டு எமக்கு வாக்களிக்க வேண்டியது மிக மிக அவசியம்.

கடந்த தேர்தல் காலத்திலும் சரி இந்தத் தேர்தல் காலத்திலும் கூட தமிழ் மக்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளை மட்டுமே ஜே.வி.பியினர் வழங்கி வருகின்றனர்.

உண்மையில் அன்று வாக்குறுதி யளித்த எவையும் இதுவரை அநுர அரசால் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறான நிலைமையில் தற்போது மேலும் பல வாக்குறுதிகளை அவர்கள் வழங்கி வருகின்றனர்.

ஆகவே, பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாறாதீர்கள். கடந்த தேர்தலில் நம்பி வாக்களித்து ஏமாற்றமடைந்தது போன்று இனியும் நம்பி ஏமாற வேண்டாம்.

எனவே, ஒட்டுமொத்த தமிழ் மக்களும் தமிழ் மக்களின் உரிமைக்காகத் தமிழ்த் தேசியத்துடன் பயணிக்க வேண்டியது அவசியம். அதற்கமைய தமிழ்த் தேசியக் கொள்கையுடன் பயணிக்கும் எமது கூட்டணிக்கு உங்கள் ஆதரவை வழங்குங்கள் எனக் கேட்டுக்கொள்கிறோம்." - என்றார்.

- - - - - - - - - - - - - -

## எரிபொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறைக்கப்பட்டு 274 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு 325 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் புதிய விலை 178 ரூபாவாகும்.

இது தவிர ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவாலும், ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 341 ரூபாவாகவும், ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 293 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்தின் விலை திருத்தத்துக்கு நிகராக லங்கா ஐ.ஓ.சியும் எரிபொருள்களின் விலையில் திருத்தத்தை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்தின் விலை திருத்தத்துக்கு நிகராக சினோபெக்கும் எரிபொருள்களின் விலையில் திருத்தத்தை மேற்கொண்டுள்ளது.

- - - - - - - - - - - - - -

## வடக்கில் 5, 940...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2025.03.28 ஆம் திகதிய 5620 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலமே இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்று இப்போது தெரியவந்துள்ளது.

இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 319 காணிகளை உள்ளடக்கி 3 ஆயிரத்து 669 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 507 காணிகளை உள்ளடக்கி ஆயிரத்து 702 ஏக்கரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 58 காணிகளை உள்ளடக்கி 515 ஏக்கரும் என மொத்தம் 5 ஆயிரத்து 940 ஏக்கர் நிலம் அரச உடமையாக்கப்படுகின்றது.

இவ்வாறு அரச உடமை என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள 5 ஆயிரத்து 940 ஏக்கர் நிலப்பரப்பில் பலரது வீடுகள், பொது இடங்கள், ஆலயங்கள் மட்டுமன்றி பல தொழில் முயற்சி மையங்களும் காணப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

யாழ். குடாநாட்டின் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவு, கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளின் கடற்கரையோரங்கள் வழியாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் வரை இந்தப் பிரதேசங்கள் நீள்கின்றன.

இந்தப் பிரதேசங்களில் உள்ள நிலங்களில் அரச நிலம் எது, தனியார் நிலம் எது எனப் பிரதேச செயலகங்களுக்கோ அல்லது மாவட்ட செயலகங்களுக்கோ அடையாளம் தெரியாத காரணத்தாலேயே இவ்வாறான அறிவித்தல் வெளியிடப்படுவதாகவும் - மூன்று மாத காலப் பகுதிக்குள் தமது காணி என்று தனியார் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அந்த நிலங்களை விடுவித்து ஏனைய நிலங்கள் அரச நிலம் என 3 மாத நிறைவில் மீண்டும் ஒரு வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் என அந்தப் பகுதிகளின் பகுதி பிரதேச செயலாளர்கள் பதிலளிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் வெளிநாட்டில் இருக்கின்றமையாலோ அல்லது உயிரிழந்திருக்கின்றமையாலோ அந்த நிலங்களுக்கு உரிய காலத்தில் உரிமை கோராவிடின் அவ்வாறான நிலங்களையும் பொதுப் பயன்பாட்டு நிலங்களையும் அரச நிலங்களாக்கும் முயற்சியாகவே இது கருதப்படுவதாக அந்தப் பகுதிகளின் நில உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் 500 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை அரச காணிகளாகச் சுவீகரித்து பிற நாடு ஒன்றுக்கு வழங்க முயற்சி இடம்பெறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய போது அவ்வாறு எந்த முயற்சியும் இல்லை என அரசும் அதிகாரிகளும் மறுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## இலங்கைக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்று புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே சார்ல்ஸ் வைட்லி இவ்வாறு கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு, வர்த்தக ரீதியான பல வெற்றிகளை அடைய உதவியுள்ளது என்றும், தொடர்ந்தும் வர்த்தக வெற்றிகளை அடைய இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தரப்படுத்தப்பட்ட மற்றும் தரமான பொருள்களை விநியோகிக்க இலங்கைக்கு மேலும் ஊக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசிய தலைவர் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்க, கருத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் தற்போதைய அரசின் கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றன என்றும் சார்ல்ஸ் வைட்லி குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை அல்லது பொதுவான விருப்பத்தேர்வு முறை தொடர்பான 27 சர்வதேச இணக்கப்பாடுகளை செயற்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.



மேலும் இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இலங்கை பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

அதேபோல், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு சாதகமான சூழலை உருவாக்கியுள்ளதுடன், பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கம் செலுத்தியிருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதார ரீதியில் சரிவடைவதற்கு முன்னைய ஆட்சியாளர்களின் அரசியல் முறையும், வீண் விரயமும், மோசடியுமே காரணமாக அமைந்திருந்ததாகவும், இப்போது நாடு மீண்டும் சரியான நிர்வாகத்தைக் கொண்டதாக மாற்றப்பட்டு வருவதாகவும், அதற்கு சிறிது காலம் அவகாசம் அவசியம் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தற்போதைய அரசின் மீது ஒட்டுமொத்த மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இலங்கையில் முன்னைய அரசுகள் தெற்கு சிங்கள வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டன. ஆனால், இம்முறை வடக்கின் தமிழ் மக்கள், கிழக்கு முஸ்லிம் மக்கள் மற்றும் தெற்குச் சிங்கள மக்களும் தற்போதைய அரசை உருவாக்க ஆதரவளித்தனர் என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்தார்.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கார்மென் மொரெனோ, வர்த்தகம் மற்றும் பொருளாதார பாதுகாப்பு ஜெனரல், கொள்கை அதிகாரி கைடோ டோலாரா, ஐரோப்பிய பிரத்தியேக நடவடிக்கை சேவையின் இலங்கை அதிகாரி கலிஜா அகிஷேவா ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மேன்மக்கள் தினம்

இன்று மே தினம்.

மேதினியின் மேன்மக்களாகிய தொழிலாளர்களின் மேன்மையையைப் போற்றும் நாள் இது.

இந்த உலகில் மனித வாழ்வியலுக்கு அடிப்படையாக விளங்குவது மனிதனின் உழைப்பும் சிந்தனையும். அவையே அவனை, பூவுலகில் மேம்பட்ட பிறவியாக உயர வழி செய்து, அவனின் மேன்மையான வாழ்வுக்கு அடிப்படையாகவும் அமைகின்றன.

ஆயினும் மனிதர்களின் இந்த 'உழைப்பு' முதலாளியத்தினால் திட்டமிடப்பட்ட முறையில் சுரண்டப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்ட விலங்காகத் தொழிலாளி அடக்கப்பட்டுள்ளான்.

“உலகத் தொழிலாளர்களே உங்கள் உழைப்பு எனும் பெரும் மூலதனத்தைக் கொடுத்து, அதற்குப் பிரதிபலனாக உங்களுடைய உரிமைகள் எல்லாவற்றையும் இழந்துவிட்டீர்கள். நீங்கள் இழப்பதற்கு கைவிலங்கைத் தவிர வேறொன்றும் இல்லை. அதே நேரம் நீங்கள் ஒன்றிணைந்தால், ஓர் பொன்னுலகம் எதிர்காலத்தில் சாத்தியப்படும்” என்று அறிவித்தவர் மார்க்ஸ்.

அந்த வரலாற்று ஓட்டத்தில் முதலாளியத்துக்கு எதிராக உழைப்பாளிகள் நடத்திய போராட்டங்களையும் அவர்களின் உரிமை மீட்புக்களையும் குறிக்கும் உயர்ந்த நாளாக அமைவது இந்த மேதினமாகும்.

மனிதன் வியர்வை சிந்தி உழைக்கிறான். அவனது உழைப்பு சக்தி பொருள் வடிவம் எடுக்கிறது. மனிதனின் சாரம் பொருள்களில் பொதிந்து பொருள் மயமாகிறது. உழைப்பில் மனிதன் பொருளாக மாறும் விந்தை ஒன்று நிகழ்கிறது. அந்த பொருள்களில் இருந்து ஒரு பண்ட உலகம் தோன்றுகின்றது. உழைப்பு சக்தியால் உருவாக்கப்படும் இந்த பண்ட உலகம் உழைப்பவனுக்கே அந்நியமானதாக, ஒரு புதிரான பொருள் உலகமாகத் தோற்றப்பாடு கொள்கிறது. உழைப்பவனின் படைப்பு அவனுக்கு அந்நியமாகி, அவனிடமிருந்து புறம்பாகி, பண்டமாகி, பணமாகி, லாபமாகி இன்னொருவனின் செல்வமாகி, கூடு விட்டு கூடு பாய்கிறது. முதலாளிய பொருளுலகில் உழைக்கும் மனிதன் தன்னை இழந்து விடுகிறான். தனது மனிதத்தை இழந்து விடுகிறான் . இதையே கார்ள் மார்க்ஸின் மூலதனம் பிட்டுக்காட்டுகிறது என்கிறார் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

“உழைக்கும் மனிதன். அவனிடமிருந்து உழைப்பாக வெளிப்பாடு காணும் உழைப்பு சக்தி. அந்த உழைப்பு சக்தியிலிருந்து உருவாக்கம் பெறும் உற்பத்தி உலகம். அந்த உற்பத்தி உலகத்தில் இருந்து உருப்பெறும் உற்பத்தி உறவுகள். அந்த உற்பத்தி உறவுகளில் இருந்து தோற்றம் கொள்ளும் வர்க்கப் பிரிவுகள். அந்த வர்க்கங்கள் மத்தியில் முனைப்புறும் முரண்பாடுகள். அந்த முரண்பாடுகளில் இருந்து வெடிக்கும் புரட்சிகள், அந்தப் புரட்சிகளால் தோன்றும் சமூக மாற்றங்கள், அந்த சமூக மாற்றங்களாக அசைந்து செல்லும் வரலாறு. இப்படியாக உழைக்கும் கரங்களில் இருந்து கட்டவிழ்கின்றது மனித சரித்திரம் எனக் கார்ள் மார்க்ஸ் விவரிக்கின்றார்” - என்கிறார் மதியுரைஞர்.

அந்த உழைக்கும் கரங்களின் உயர்வைப் போற்றும் நாள் இது.

உழைப்பாளர்களுக்கான தினசரி வேலை நேரம் 8 மணித்தியாலங்களே என உழைப்பு நேரத்தைத் தீர்மானிக்கும் விதத்தில் அந்த உரிமையைப் போராடிப் பெற்ற வரலாற்று தினம் இன்று. இந்த நாளில் உழைப்புக்கு அர்த்தம் தரும் தொழிலாளர் வர்க்கத்தின் உயர்வுக்காக உழைக்க பிரதிக்ஞை செய்வோம்.

# சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல்

இந்தியா முழுவதும் மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி இருப்பதாக அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங், நிர்மலா சீதாராமன், நிதின் கட்கரி, சிவராஜ் சிங் சவுகான், எஸ். ஜெய்சங்கர், தர்மேந்திர பிரதான், பியூஷ் கோயல், அஸ்வினி வைஷ்ணவ், மனோகர் லால் கட்டார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அஸ்வினி வைஷ்ணவ்,

“வரவிருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதிவாரி கணக்கெடுப்பு சேர்க்கப்பட வேண்டும் என்று அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு இன்று முடிவு செய்துள்ளது.

காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது, அது எப்போதும் சாதிவாரி கணக்கெடுப்பை எதிர்த்தே வந்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் மறைந்த மன்மோகன் சிங் சாதிவாரி கணக்கெடுப்பு விஷயத்தை அமைச்சரவையில் பரிசீலிக்க வேண்டும் என்று கூறினார். இந்த விவகாரத்தை பரிசீலிக்க அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டது. பெரும்பாலான அரசியல் கட்சிகள் சாதிவாரி கணக்கெடுப்பை வலியுறுத்தியதை அடுத்தே, காங்கிரஸ் அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முடிவு செய்தது.



காங்கிரஸ்ும் இண்டியா கூட்டணி கட்சிகளும் சாதிவாரி கணக்கெடுப்பை ஓர் அரசியல் கருவியாக மட்டுமே பயன்படுத்தியுள்ளனர் என்பது நன்கு புரிந்து கொள்ளப்படுகிறது. சில மாநிலங்கள் சாதிகளைக் கணக்கிட கணக்கெடுப்புகளை நடத்தியுள்ளன. சில மாநிலங்கள் இதைச் சிறப்பாகச் செய்திருந்தாலும், வேறு சில மாநிலங்கள் அரசியல் கோணத்தில் இருந்து மட்டுமே இத்தகைய கணக்கெடுப்புகளை நடத்தின. இத்தகைய கணக்கெடுப்புகள் சமூகத்தில் சந்தேகங்களை ஏற்படுத்தின. அரசியலால் நமது சமூக அமைப்பு பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதிவாரி கணக்கெடுப்பு சேர்க்கப்பட வேண்டும்.” என தெரிவித்தார்.





## பதற்றம் அதிகரிப்பு எதிரொலி:

# இந்தியாவை விட்டு எல்லை வழியாக வெளியேறிய 786 பாகிஸ்தானியர்கள்

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் காரணமாக எல்லையில் பதற்றம் அதிகரித்திருப்பதால், அட்டாரி - வாகா எல்லை வழியாக 786 பாகிஸ்தானியர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளனர்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குகாரணமானபாகிஸ்தானுக்குபதலடி கொடுக்க முடிவெடுத்துள்ள மத்திய அரசு, இவ்விடயத்தில் இராணுவத்துக்கு முழு சுதந்திரத்தை வழங்கி உள்ளது. இதனால், எப்போது வேண்டுமானாலும் இராணுவம் தனது பதிலடி நடவடிக்கையை தொடங்கலாம் என கூறப்படுகிறது.

இந்தியா அடுத்த 24-36 மணி நேரத்தில் ராணுவ நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளதாக நம்பகமான உளவுத் துறை தகவல்களை மேற்கோள் காட்டி பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர் அத்தாவுல்லா தரார் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஏப்ரல் 24 ஆம் திகதி தொடங்கி ஆறு நாள்களுக்குள் 786 பாகிஸ்தானியர்கள் அட்டாரி-வாகா எல்லை வழியாக இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளனர் என மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில், பாகிஸ்தானிலிருந்து அட்டாரி-வாகா எல்லை வழியாக மொத்தம் 1376 இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ளனர் என அந்த அதிகாரி கூறியுள்ளார்.

மேலும் அவர், “பாகிஸ்தானுக்கு நேரடி விமானம் இல்லாததால், டுபாய் அல்லது பிற வழித்தடங்கள் வழியாக பலர் விமானம் மூலம் வெளியேறியுள்ளனர். மாநில பொலிஸ் மற்றும் பிற மத்திய நிறுவனங்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் வசிக்கும் பாகிஸ்தான் நாட்டினரை அடையாளம் கண்டு வருவதால், அதிகமான பாகிஸ்தான் நாட்டினர் நாட்டை விட்டு வெளியேறுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.” என்று கூறியுள்ளார்.



# காஞ்சி சங்கர மடத்தின் மடாதிபதியாக ஸ்ரீகணேச சர்மா திராவிட் பொறுப்பேற்பு

காஞ்சிபுரம் சங்கர மடத்தின் இளைய மடாதிபதியாக ஸ்ரீகணேச சர்மா திராவிட் நேற்று பொறுப்பேற்றார். காஞ்சிபுரம் சங்கர மடத்தின் 71 ஆவது பீடாதிபதி யான ஸ்ரீகணேச சர்மா திராவிட் நேற்று முதல் சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி என்று அழைக்கப்படுவார் என, அவருக்கு சந்நியாஸ்ரம தீட்சை வழங்கிய சங்கர மடத்தின் 70 ஆவது பீடாதிபதி விஜயேந் திர சரஸ்வதி சுவாமிகள் தனது ஆசி உரையில் குறிப்பிட்டார்.

கடந்த 25 ஆம் திகதி காஞ்சி சங்கர மடம் வெளியிட்ட அறிக்கையில்,

“ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் 70 ஆவது பீடாதிபதி ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், புனித அட்சய திருதியை தினத்தில் (நேற்று புதன்கிழமை) ஸ்ரீதுட்டு சத்ய வெங்கட சூர்ய சுப்ரமண்ய கணேச சர்மா திராவிட் டுக்கு, காஞ்சி காமாட்சி அம்மன் கோயி லில் உள்ள பஞ்ச கங்கா தீர்த்தத்தில் காலை 6 மணி முதல் 9 மணிக்குள் சந்நியாஸ்ரம தீட்சை அருள உள்ளார்” என தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, ஸ்ரீதுட்டு சத்ய வெங்கட சூர்ய சுப்ரமண்ய கணேச சர்மா திராவிட் டுக்கு, சந்நியாஸ்ரம தீட்சை வழங்கும் வைபவம் காமாட்சி அம்மன் கோயிலில் உள்ள பஞ்ச கங்கா தீர்த்தத்தில் நேற்று காலை நடைபெற்றது.



சந்நியாஸ்ரம தீட்சை பெருவதற்கு முன்பாக ஸ்ரீதுட்டு சத்ய வெங்கட சூர்ய சுப்ரமண்ய கணேச சர்மா திராவிட், திருக் குளத்தில் இறங்கி தான் அணிந்திருந்த கடுக்கண், மோதிரம், பூணூல், அரை ஞாண் கயிறு ஆகியவற்றை துறந்து, சந்நியாசத்தை ஏற்றார். அதன்பின், வேத மந்திரங்கள் முழங்க காலை 6.30 மணி அளவில் பூஜ்ய ஸ்ரீசங்கர விஜயேந் திர சரஸ்வதி சுவாமிகள், அவருக்கு தீட்சை வழங்கி பிறகு காவி வஸ்திரம், கமண்டலம், தண்டத்தை வழங்கினார்.

தொடர்ந்து இளைய மடாதிபதி யின் தலையில் சாளக்கிராமம் வைத்து, சங்கு தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து, பல்வேறு மந்திர உபதேசங்களைச் செய்தார். தொடர்ந்து, பூஜ்ய ஸ்ரீங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், அவருக்கு ஸ்ரீசத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் என்ற திருநாமத்தை சூட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்ரமணிய சுவாமி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# ட்ரம்ப் வரிகள் மூலமாக நாள் ஒன்றிற்கு 2 பில்லியன் டொலர் வருவாய் ஈட்டுகிறார்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது வரிகள் மூலமாக நாள் ஒன்றிற்கு 2 பில்லியன் டொலர் வருவாய் ஈட்டுகிறார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இறக்குமதி வருவாய் சற்று அதிகரித்திருந்தாலும், அது இன்னும் ஜனாதிபதி பரிந்துரைத்ததை நெருங்கவில்லை என குறிபப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க வர்த்தகத் துறையின் சமீபத்திய தரவுகளின் படி, வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 25 அன்று, அமெரிக்கா சுங்க வரி மற்றும் சில கலால் வரிகள் மூலம் 285 மில்லியன் டொலர்களை ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஏப்ரல் மாதத்தில் இதுவரை, மொத்தம் 16.1 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தின் கடைசி நாளான ஜனவரி 17 அன்று பெறப்பட்ட தினசரி வருமானம் 128 மில்லியன் டொலரில் இருந்து தற்போது அதிகரித்துள்ளது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகெங்கிலும் உள்ள கிட்டத்தட்ட அனைத்து வர்த்தக கூட்டாளிகள் மீதும் பரஸ்பர வரிகளை விதிக்க இருப்பதாக ட்ரம்ப் அச்சுறுத்தியிருந்தார்.

ஃபெண்டானில் வர்த்தகத்தில் சீனாவின் பங்கு காரணமாக, முந்தைய 20 சதவீத விகிதத்துடன் கூடுதலாக, சீனாவிற்கு அதிகபட்சமாக 125 சதவீத வரியை அவர் விதித்தார்.

இதற்குப் பதிலாக, அமெரிக்கா மீது 125 சதவீத வரிகளை சீனா விதித்த நிலையில், அதன் பின்னர், இரு தரப்பினரும் சிறிய பின்வாங்கல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

ட்ரம்பின் அதிரடி நடவடிக்கைகளால் அமெரிக்க பொது மக்கள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான அதிகபட்ச சராசரி வரி விகிதம் 28 சதவீதமாக எதிர்கொள்கின்றனர்.

2024 இல், பைடன் நிர்வாகம் சீனாவின் மின்சார வாகனங்களுக்கு 100 சதவீதமும், எஃகு மற்றும் அலுமினியத்திற்கு 25 சதவீதமும், குறைக்கடத்தி சில்லுகளுக்கு 50 சதவீதமும் வரியை அறிமுகப்படுத்தினார்.

இது ட்ரம்பின் முதலாம் ஆட்சி காலத்தின் தொடர்ச்சி என்றே தெரிவிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்த பிறகு, சில ரஷ்ய இறக்குமதிகளுக்கு 35 சதவீத வரி விதிப்பு உட்பட பரவலான பொருளாதாரத் தடைகளை பைடன் நிர்வாகம் ஏற்படுத்தியது. கனடா, பிரித்தானியா போன்ற பிற நாடுகளும் ரஷ்யா மீது இதேபோன்ற 35 சதவீத வரியை விதித்தன.

ட்ரம்பின் வரி விதிப்புகளால் ஆட்டோமொபைல் துறையில் உள்ள நிறுவனங்கள் ஏற்கனவே பணிநீக்கங்களையும் வேலை நேர குறைப்பையும் தொடங்கியுள்ளன.

இந்தஆண்டுஇறுதிக்குள்அமெரிக்காவில்770,000வேலைகள் இந்த வரிகளால் இழக்க நேரிடும் என்றே ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# சுவீடனில் துப்பாக்கி சூடு: மூவர் பலி, பலர் காயம்

சுவீடனின் உப்சாலா நகரில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

உப்சாலா நகரின் வக்சலா சதுக்கத்தில் உள்ள சலூன்கடையில் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளது. துப்பாக்கிச்சூடு சப்தத்தை கேட்டு பொலிஸாருக்கு அங்குள்ள மக்கள் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் துப்பாக்கிச்சூடு குறித்து விசாரித்து வருகின்றனர். ஐந்து முறை துப்பாக்கிச் சூடு சப்தம் கேட்டதாக அப்பகுதி மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

துப்பாக்கி சூட்டை நடத்திய சந்தேகத்திற்குரிய குற்றவாளி குற்றம் நடந்த இடத்திலிருந்து மின்சார ஸ்கூட்டரில் தப்பிச் சென்றுள்ளார் என அந்நாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்கான நோக்கம் குறித்து உடனடி அறிகுறிகள் எதுவும் இல்லை, மேலும் சந்தேகத்திற்குரிய குற்றவாளி பற்றிய விவரங்களை பொலிஸ் அறிக்கையில் வழங்கவில்லை.




இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம் பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பது கள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்கா கப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட் டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாம கேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த் தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போரா ளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராக வும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாம கர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசார ணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்று களையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுச ரணை சட்டத்தரணியா கச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்க ளிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

11

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?




விஜயவீரா குடும்பம்

ஜே.வி.பி. துளிர்விட்டது 1967 காலங்களில். இயக்கத்தில் ஈடுபாடு காட்டியவர்களிடையே முறையான அங்கத்துவக் கூட்டங்களோ பதவி களுக்காகத் தேர்தலோ இருந்ததில்லை. எவர் ஈடு பாடு காட்டியவர்களிடையே செல்வாக்குப் பெற்றி ருந்தார்களோ அவர்கள் மதிக்கப்பட்டு தலை வர்களாக கருதப்பட்டார்கள். எதுவித பதவியும் இன்றி ,அவர் (விஜயவீர) ஜே.வி.பிக்காக பத்திரி கையாளர் ஒருவருக்குப் பேட்டி கொடுத்த போது இயக்கத்தின் எந்த பதவியில் இருந்து பேசு கிறீர்கள் என்ற கேள்விக்கு 'தான் அந்தக் கட்சி யின் பொதுச் செயலாளர்' என்று பதில் தரப்பட்டது. 1971இல் பொலிஸ் விஜயவீரவிடம் வாக்குமூலம் பெற்ற போதும் இதுதான் அப்பொழுதும் மறு மொழியாக இருந்தது. தோழர்கள் அவரைப் பொதுச் செயலாளராகப் பார்த்தார்கள் என்பதே ஆகும். அந்தப் பதவிக்கு அவர் இயக்கத்தால் தேர்வின் அடிப்படையில் தேர்வாகவில்லை.

இந்தக் காலகட்டத்தில் இருந்த ஜே.வி.பி. இயக்கத்தை முதலாவது தலைமுறை ஜே.வி.பி. என வகுக்கலாம். அவர்கள் தமிழ்ப் பகுதிகளை நேரடி யாக உள்ளடக்காமல், நாட்டை ஐந்து பகுதிகளாக (ஊழநெள)ஆகப் பிரித்து அங்கத்தினர் சேர்ப்பும் பிரசாரத்தையும் முன்னெடுத்தமையை குறிப் பிட்டிருந்தேன். இந்த முதலாம் தலைமுறை 1971 இல் ஏற்படுத்திய கிளர்ச்சி மிக இலகுவாகவும் ஆணித்தரமாகவும் சிறிமாவோவின் அரசாங்கத் தால் அடக்கப்பட்டு, கைது செய்யப்பட்டவர்களை பின்னர் அவர்கள் அமைத்த குற்றவியல் நீதி மன்றங்கள் மூலம் குற்றவாளிகளாகத் தண்டித்த னர்.

அங்கத்தினர், பொதுமக்கள் மத்தியில் விஜய வீர தனது பின்னணியில் செல்வாக்கு மிகுந்த வராக இருந்தாலும் பொலிஸ் வாக்குமூலங்க ளிலும் சாட்சியங்களின் அடிப்படையிலும் குற்றம் சாட்டப்பட்டவர்களில் பியதிலக முதலாவது, லயனல் போபகே இரண்டாவது, உயங்கொட மூன்றாவது என்ற வரிசையில் விஜயவீர பதினொன்றாவ தாக வந்தார்.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சி அடக்கப்பட்ட



பின் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் பலர் விடு தலை அடைந்ததும் 1977 முதல் ஜே.வி.பியி லிருந்து விலகி வேறு மாற்றுக் கட்சிகளுக்கும் வேறு

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி ▲

துறைகளுக்கும் சென்று விஜயவீரவுக்கு எதிராகவே நின்றனர். அவர்களுடைய எதிர்ப்புக்கள் முக்கியமாக விஜயவீர நடத்திய வகுப்புகளில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் நாடு கடத்தப்பட வேண்டும் என்பதும் இந்திய விரிவாக்கம் பற்றியதும் அவரது தலைமைத்துவப் பாணிகளும் ஆகும்.

ஆக, 1971 இல் இருந்து 1983 ஆம் ஆண்டு ஜே.வி.பி. தடை செய்யப்படும் வரையான காலம் அதன் இரண்டாம் சுற்று அல்லது தலைமுறையெனக் கருதப்படலாம். அவர்களுக்கு அந்த ஜனநாயகக் காலத்தில் வந்து சேர்ந்தவர்களில் பலர் புதியவர்கள். இந்தக் காலத்தில் கட்சியைத் தேர்தல் வெற்றிக்காக, வாக்கு பெறக்கூடிய வகைகளில் கட்சிக் கொள்கைகளை கொண்டு நடத்துவதா, அன்றில் தேர்தலைக்



குறி வைக்காது, உண்மையான சமுதாய மாற்றத்திற்கான தொடர்புகளையும் கட்டமைப்புகளையும் விரிவு படுத்துவதா என்ற வாதங்களில் லயனல் போபகேயும் அவரது சகாக்களும் வெளியேறினர். அந்த விவாதங்களில் இனப் பிரச்சினைக்கான தீர்வும் முக்கியமாக இருந்தது. சிங்கள மக்களின் ஆதரவுக்காக சிங்கள - பௌத்த தேசியவாதத்துக்கு முன்னுரிமை கொடுத்து, தமிழர் விவகாரங்களை அந்தப் பேரினவாதத்துடன் முரண்படாமல் நகர்த்த வேண்டும் என அவர் (விஜயவீர) பேசினாலும், அடிப்படைகளில் அவர் அப்பட்டமான சிங்கள – பௌத்த பேரினவாதத்தைத்தான் ஜே.வி.பி. கட்சியின் அத்திவாரமாகக் கட்டமைத்தார்.

1967 - 1969 காலங்களில் விவசாய, படித்தும் வேலையற்ற பாமர சிங்கள மக்கள் இடையே, ஆங்கிலம் சரளமாகப் பேசி, மார்க்ஸீய தத்துவங்களையும் அழகாக அவர்கள் புரியும்படி எடுப்பாக விஜயவீர பேசிய போது இளைஞர்களை அவர் கவர்ந்தார். அப்பொழுது அவர் மாஸ்கோவில் வைத்தியப் படிப்புக்காக ரஷ்யாவின் புலமைப் பரிசில் பெற்றுச் சென்று மார்க்ஸீய சிந்தனைகளில் கட்டுரைகள் உருவாக்கி, வைத்தியருக்கான படிப்பைக் கைவிட்டு ஊர் திரும்



பினார். அவர் எழுதிய கட்டுரைகள் ரஷ்ய கம்யூனிஸ்ட் அதிகாரிகளுக்கு அதிர்ச்சி தந்தமையால் புலமைப் பரிசிலினை அவர்கள் தொடரவில்லை. விசாவும் தர மறுத்தார்கள். தன் வாழ்வாதாரத்துக்காக வேறு வேலைகள் தேடினாலும் அவரது பின்னணியில் ஒன்றைப் பெற்றுக் கொள்வது இலகுவாக இருக்கவில்லை. ஆகவே வேலையற்ற படித்த பட்டதாரிகளது விரக்தியில் அவர் தன்னையும் இணைத்துப் பேசுவது இளைஞர்களுக்கு நம்பிக்கை தந்தது. தான் வைத்திய படிப்பை முடித்து வந்தாலும் தனக்கு அந்தத் துறையில் வேலை கிடைத்திருக்காது, ஏனெனில் ரஷ்ய படிப்புக்கள் அந்த நாள்களில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை, தரப்பட்ட புலமைப் பரிசிலினால் தாம் ஏமாற்றப்பட்டவராகவே அவர் பிரஸ்தாபித்தார். ஆயினும் திருமணம் என வந்தபோது சமுதாயத்தில் மேல்வர்க்கத்தின் வசதியான குடும்பத்தில், நல்ல தொடர்புகள் கொண்ட பெண்ணாகவும் தேர்ந்தெடுத்தார். அப்போது ரஷ்யாவில் வைத்தியத்துக்காகப் படித்ததும், பிடிக்காமல் வெளியேறியதும், ஐரோப்பிய பாஷைகளில் பல உரையாட முடியும் என்பதும் பேசப்பட்டு, இவை தேர்தல் காலங்களிலும் மேடைகளிலும் வலம் வந்தன.

தனது விருப்பமான அரசியல் துறையில் இறங்க, அப்பொழுது உருவாகிய சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் அவர் சேர்ந்து அதில் முழு நேர ஊழியனாகவும் தொண்டனாகவும் இணைந்தார். அவருக்கு அப்பொழுது கிடைத்த சம்பளம் மாதத்திற்கு 150 ரூபா. கட்சியின் தலைவராக இருந்தவர் சீனச் சார்பாளர் சண்முகதாசன். ஆனால் விரைவில் இன அடிப்படையில் கட்சியுடன் பேதப்பட்டு, பின்னாளில் அவருடன் ஜே.வி.பி. இயக்கத்தில் முக்கியமானவர்களாகச் செயற்பட்ட சனத், பியத் திலக, கருணாரத்தின, லொக்கு அத்துல, பிரேமபால, மில்டன் போன்றவர்களுடன் சேர்ந்து கட்சி கொள்கைகளிலும் போக்கிலும் சண்முகதாசனுடன் முரண்டு பிடித்தார். தனது நண்பர்களுக்கு, தேசியக் கட்சியாக சிங்கள மக்களிடையே பெரும்பான்மையாக இயங்க வேண்டிய சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி அதன் தலைவராக தமிழரான சண்முகதாசனைக் கொண்டிருப்பது சாத்தியமற்றது என்று நிலைப்படுத்த முயன்றார். கட்சிக்குள் ஏற்படக்கூடிய பாரிய பிளவுகளைத் தவிர்ப்பதற்காக விஜயவீரவையும் அவரது நண்பர்களையும் சண்முகதாசன் கட்சியிலிருந்து வெளியேற்றினார்.

அதனால் அவர் போன்ற சிங்களத் தலைமையில் அவர்களது தேசியத்திற்காக இயக்கம் அங்கத்

தொடர்ச்சி ▼


# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

தினர்களைத் தேடியது. அதுவே நாளடைவில் ஜே.வி.பி. இயக்கமாக உருவெடுத்தது.

'சண்முகதாசன் தமிழர் நலன்களுக்காகத் தான் உழைக்கிறார், அப்படியாக தமிழர் மற்றும் இந்திய ஏகாதிபத்திய வளர்ச்சியைக் கட்டுப் படுத்தவே நாங்கள் எங்களது ஜே.வி.பி. கட்சி யின் அங்கத்தினர்களுக்கும் விசுவாசிகளுக் கும் இந்திய தொழிலாளர்களதும் வர்த்தகர்கள தும் வெளியேற்றத்தையும் எங்களது ஐந்து பாடங் களில் ஒன்றாக வைத்தோம்' என 1971 இல் பொலி ஸாருக்குத் தந்த வாக்குமூலத்தில் தெரிவித்து சண்முகதாசனது நடவடிக்கைகளை அவற்றுக்கு ஆதாரமாக முன் வைத்தனர்.

சண்முகதாசன் கட்சியில் தனக்கு ஆதர வான தமிழ் அங்கத்தினர்களுடன் சேர்ந்து கட்சிப் பணத்தை விழுங்கிக் கொள்கின்றார் என ஒரு பக்கத்திலும், அவர் மத்திய கொழும்புத் தொகு திக்கு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது அந்தத் தொகுதியில் இருந்த தமிழ் வாக்காளர்களிடம் பிரத்தியேக ஆதரவு கோரி இன அடிப்படையில்



பிரசாரம் செய்கிறார் என மறுபுறத்திலும் குற்றம் சுமத்தப்பட்டது. தான் முழு நேர ஊழியனாக இருந்து சில பணச் செலவுகளுக்கு பொறுப்பாக இருந்த போதும், சண்முகநாதன் பெருமளவில் தமிழ்ப் போஸ்டர்களும் பிரசாரத் துண்டுப் பிரசுரங்களும் அடித்தார் என்றும், அவை பற்றி கேட்டபோது அங் கிருந்த தமிழ் வாக்காளர்கள் தமிழனான தனக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. தனது வாக்குமூலத்தில் சண் முகநாதன் இன அனுசரணைகளில் கம்யூனிஸ த்தை வளர்க்கப் பார்த்தமையால் அவற்றைக் கட்டுப்படுத்துவது தேவையானதாக இருந்தது என்ற தனது வியாக்கியானங்களையும் தம்மை விசாரித்தவர்களிடம் அவர் கூறினார்.

இந்தக் கருத்துக்கள் அவரது நண்பர்களிடையே விதைக்கப்பட்ட போது – அதாவது, ஒரு தமிழர் தலைமை தாங்கும் கட்சி கடைசி வரையும் பெரும் பான்மை மக்களிடையே வளர்வது முடியாது, அவர்கள் ஊடாக அரசியல் அதிகாரம் அடைந்து விட முடியாது – என்பதை விளங்கிக் கொண்டு சண் முகதாசனோடு முரண்பட்ட விஜயவீரவும் நண்பர் களும் அவரை வெளியேற்ற எடுத்த முயற்சிகளில் தாங்களே வெளியேற நேர்ந்தது.

அவரது பின்னைய கருத்தாக்கங்களில் கூட 1971 காலங்களில் சிங்களவரின் அரசியல் மாற்றம் சிங்களத் தலைமைகள் ஊடாகவே வர வேண்டும் என நிர்ப்பந்தித்தார்.

ஆக. 1977-இல் இனப்பிரச்சினை தீர்வில் மிதவாத போக்கை கடைபிடித்த லயனல் போபகே போன்றோருடன் முரண்பட்டது விஜயவீரவின் அடிப்படை கொள்கைகளில் இருந்து விலக விரும்பாத மனப்பாங்குதான். இதனை அவர்களது இரண்டாம் சுற்றில் உள்ள முக்கிய அங்கமாகவும் அதைத் தொடர்ந்து அவர்கள் சிங்கள – பௌத்த பேரினவாதத்தை நோக்கி நகர்ந்தார்கள் என்ப தையும் கவனிக்க வேண்டும்.

லயனல் போபகே போன்றோரின் முன் மொழிவுகளை ஏற்று, வடக்கு – கிழக்குப் பகுதியில் முற்போக்கு இளைஞர்களுக்கு வரவேற்புக் கரம் நீட்டப்படவில்லை. தமிழ் இளைஞர்கள் அல்லது அவர்களது அமைப்புகள் இந்தச் சந்தர்ப்பங்களைப் பாவித்து ஊடுருவி விடுவார்களோ என்ற அச்சமும் அங்கலாய்ப்பும் விஜயவீரவுக்கு சண்முகதாசனுக்கு எதிராக அவர் பார்த்த பார்வைகளிலேயே இருந் தன.

ஆகவே தொடர்ந்த காலங்களில், 1983 ஆம் ஆண்டு கலவரத்தின் நடுவில் அரசாங்கத் தினால் ஜே.வி.பி. தடை செய்யப்பட்டது. தங் களுடைய அங்கத்தினர்களிடையே சிங்கள – பௌத்த பேரினவாத கொள்கைகளை முன்னெ டுக்க வேண்டிய தேவைகள் பற்றியும், அதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அந்நியப்பட வேண்டும் என்ற பிரசாரங்களையும் அவர்கள் மேற்கொண்ட-ார்கள். ஜே.வி.பியின் இந்த வளர்ச்சியை தனது இனவிரோத கொள்கைகளுக்காக ஜே.ஆர். சாதகமாகப் பார்த்தார். பாம்பின் கால் பாம்பறி யும் என்பார்கள். 1983இல் தமிழருக்கு எதிரான வன்முறைகள் வெடித்த போது இந்த பாம்புகள் எல்லாமே தங்களுக்குள் இதற்கு யார் பொறுப்பு என்று தமிழர்களின் வெந்த புண்ணுக்கு வேல் பாய்ச்சினார்கள். இருபக்கமுமே தமிழ் மக்கள் சிங்கள மக்களின் தயவில்தான் தங்கி இருக் கிறார்கள், அதை மறந்து அவர்களுக்கு சவாலாக கிளர்ந்தெழுந்தால் அதன் விளைவுகளை எதிர் பார்க்க வேண்டும் என்ற மனோபாவங் களையே கடும்போக்குவாதிகள் வெளிப்படுத்தினர். இரு பகுதிகளுமே யாரை யார் பாவிப்பது என்ற வழிகளில் தங்களைத் தயார் படுத்த, விடுதலைப் புலிகளால் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டமை சிங்களவரின் உணர்ச்சிக் கொந்தளிப்பாக வெடிக்க மற்றவர்கள் அதனைப் பாவித்தனர்.

செப்டம்பர் 1983இல் ஐக்கிய தேசியக் கட்சி யின் ஆளுமைக்கு உட்பட்ட 'லங்கா ஜாதிக தோட்ட தொழிலாளர் சங்கம்' பாதிக்கப்பட்ட தேயிலைத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்திய கூட்டத்தில் அந் தச் சங்கத்திற்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் காமினி திஸநாயக்கா இந்திய தொழிலாளர்களைப் பார்த்து பின்வருமாறு கேட்டார்:-

"யார் உங்களைத் தாக்கியது? சிங்களவர்கள். யார் உங்களைப் பாதுகாத்தது? சிங்களவர்கள். எங்களுக்குதான் உங்களைத் தாக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் உரிமை இருக்கிறது" – என்றார்.

அரசாங்கமே இதைத் திட்டமிட்டு செய்தது என்ற பரவலான நம்பிக்கை. ஆனால் ஜே.ஆரோ, ஜே.வி. பியினர் உட்பட்ட இடதுசாரிகளே இதனைத் திட்ட மிட்டுச் செய்தார்கள் என அவர்களைத் தடை செய்தார்.

அவற்றை சற்று விரிவாக நாளை பார்ப்போம்.

**(தொடரும்)**




# பழுதடைந்த முட்டைகள் விற்பனை சுகாதாரப் பகுதியினர் சுற்றிவளைப்பு

## வவுனியாவில் நேற்று நடவடிக்கை

(கி.வசந்தன்)

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் உள்ள முட்டை விற்பனை நிலையத்தில் பாடசாலை உட்பட பல தரப்புகளுக்கும் பழுதடைந்த முட்டை விற்பனை செய்ததாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கையை நேறு மாலை மேற்கொண்டனர்.

இதன்போது பொது சுகாதாரப் பரிசோதகர்களால் பல ஆயிரத்திற்கும் மேற்பட்ட முட்டைகளும் மீட்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டன.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் இயங்கி வரும் முட்டை விற்பனை நிலையத்தில் இருந்து பாடசாலை மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட முட்டைகள் பழுதைடைந்த நிலையில் கணப்பட்டன என வவுனியா பொது சுகாதர பரிசோதகர்களுக்கு கிடைத்த 3 முறைப்பாடுகளையடுத்து அந்த வர்த்தக நிலையம் மீது சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது பாவனைக்கு உதவாத முறையில் முட்டை விற்னை செய்ததாக வர்த்தக நிலையத்திற்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டதுடன், அதிகளவலான முட்டைகளும் பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டன.





# வவுனியாவில் ஆளும் கட்சி வேட்பாளரின் சகோதரனின் கடையில் ஒரு தொகை வாக்காளர் அட்டைகள் மீட்பு!

## கடை உரிமையாளரும் தபால் ஊழியரும் கைதாகி விளக்கமறியலில்

(வவுனியா நிருபர்)

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளரின் சகோதரனின் வியாபார நிலையம் ஒன்றில் இருந்து ஒரு தொகை வாக்காளர் அட்டைகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆளும் கட்சி வேட்பாளர் ஒருவரின் சகோதரனும், தபால் ஊழியர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள பலசரக்கு வியாபார நிலையம் ஒன்றில் ஒரு தொகை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குரிய வாக்காளர் அட்டைகள் இருக்கின்றன எனத் தேர்தல் திணைக்களத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து, அங்கிருந்து ஒரு தொகை வாக்காளர் அட்டைகளை மீட்டுள்ளனர். அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றத்திற்காக அவ் வட்டாரத்தில் ஆளும் கட்சியில் போட்டியிடும் வேட்பாளரின் சகோதரனான வியாபார நிலையத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். அந்தப் பகுதிக்குரிய தபால் ஊழியரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை அவர்களுக்கு விளக்கமறியல் வைக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.






# பஹல்கம் பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு யாழில் அஞ்சலி!

இந்தியாவின் ஜம்மு – காஷ்மீர் பஹல்கம் பகுதியில் பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களுக்கு யாழில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்தியாவின் காஷ்மீரில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 26 அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இதன் போது உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நேற்றையதினம் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் சாய்முரளி, வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள், பொது மக்கள் எனப் பல தரப்பினரும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.









# தமிழரசு நிராகரித்தவர்களே ஆளும் கட்சி வேட்பாளர்கள்

## இரா.சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு









(வாலகிருஸ்ணா)

தமிழரசுக்கட்சியின் அலுவலகத்திற்கு முன்பாக ஆசனம் கேட்டு கெஞ்சி நின்று, எங்களால் நிராகரிக்கப்பட்டவர்களே இன்று தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக இணைந்துள்ளனர் எனத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்கு 15ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளரின் தேர்தல் பிரசார அலுவலகம் நேற்று முன்தினம் மாலை திறந்துவைக்கப்பட்டது.

நாவற்குடா பிரதான வீதியில் 15ஆம் வட்டார வேட்பாளர் டினேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழாவில் தமிழரசுக்கட்சியின் இரா.சாணக்கியன் பிரதம அதிதியாக கலந்துகொண்டுஅலுவலகத்தைத்திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழரசுக்கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாநகர சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்கள், பெருமளவான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த சாணக்கியன் எம்.பி. –

ஒரு தேசிய அரசாங்கத்தின் தொகுதி கூட்டத்தினை விட எங்களது ஒரு வட்டாரத்திற்கான கூட்டத்திற்கு அதிகளவான மக்கள் வருகை தருகின்றார்கள் என்றால் எங்களது கட்சியின் வெற்றியை யாராலும் தடுக்கமுடியாது.

இன்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எங்களுக்கு சவால் விடுத்துவருகின்றது. நாங்கள் எந்த வளமும் இல்லாமல் மக்கள் ஆதரவுடன் மட்டுமே பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றோம்.

தேசிய மக்கள் அரசாங்கத்தினர் கடந்த காலத்தில் ஊழல், ஊழல் என்று கூறித் திரிந்தார்கள். தற்போது 155பேரின் நாடாளுமன்ற சம்பளத்தினை தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைமை செயலகமே எடுக்கின்றது. ஊழல், ஊழல் என்று சொல்லும் இவர்கள் நாங்கள் நிராகரித்தவர்களையே மட்டக்களப்பு மாவட்டத்தில் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளார்கள்.

எங்களது கட்சி அலுவலகங்களுக்கு வந்து ஆசனம் கேட்டுக் கெஞ்சி நின்றவர்களில் ஊழல்வாதிகள், பல்வேறுபட்ட நடத்தையுள்ளவர்கள் என நாம் நிராகரித்தவர்களையே தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளனர். சில வேட்பாளர்கள் கேட்டுவந்தவர்கள் தமிழரசுக்கட்சிக்குள் அழுதார்கள். நாங்கள் அவர்களின் தனிப்பட்ட செயற்பாடுகள் காரணமாக நிராகரித்தவர்களை தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களாக நிறுத்தினர். அவர்கள் ஊழல்வாதிகள் பற்றிப் பேசுகின்றார்கள். – என்றார்.

# கிழக்குப் பல்கலை உபவேந்தர் தெரிவு; முதல் நிலையில் பேராசிரியர் பிரதீபன்!

(கனகராசா சரவணன்)

கிழக்கு பல்கலைக்கழகத்திற்கான 11 ஆவது உபவேந்தரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பல்கலைகழகத்தில் இடம்பெற்றது. இதில் முதல் நிலையில் முன்னாள் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன், உட்பட 3 பேர் தெரிவு செய்யப்பட்டு பல்கலைகழக மானிய ஆணைக் குழுவிற்கு அவர்கள் பெயர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த உபவேந்தருக்கான தேர்தலில் 8 பேர் களமிறங்கினர். இவர்களுக்கான நேர்முகஒ பரீட்சை நேற்று பல்கலைகழக பேரவையினால் நடாத்தப்பட்ட நிலையில் முதல் நிலையில் முன்னாள் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன், இரண்டாவதாக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், மூன்றாவதாக தற்போதைய சௌக்கிய பீட பீடாதிபதி பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மூவரில் ஒருவரை உப வேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்து அதற்கான நியமனத்தை வழங்குவார்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.05.2025




உங்கள் புத்திசாலித் தனத்தை வளர்த்து அதன் மூலம் பிரகாசிக்கலாம். கலை மற்றும் இசை போன்றவற்றில் ஈடுபட்டு பயனடையலாம். உங்கள் வளர்ச்சிக்கு இன்றைய நாளைப் பயன்படுத்தலாம். இன்று அதிக முயற்சி எடுத்து அதிக பலன் பெறும் நாள்.

உங்கள் பணியில் வளர்ச்சி காணப்படும். புதிய விஷயங்களை கற்றுக்கொள்வீர்கள். பணி நிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் பழகும் போது நகைச்சுவை உணர்வு வெளிப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் தேவையைக் காட்டிலும் அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள். சுய வளர்ச்சி உங்களுக்கு வழி காட்டும். பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் திறமை உங்கள் பணியில் வெளிப்படும். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும் நல்ல வாய்ப்பு இன்று காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாகப் பழகுவீர்கள். இதனால் அவர் உங்களை நன்கு புரிந்துகொள்ள உதவும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்களால் சேமிக்க இயலும்.

உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.




இன்று சாதகமான நாள் அல்ல. மன உளைச்சலை சமாளிக்க அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் விருப்பங்களை அடைவதற்கு ஏதோ ஒன்று குறைவது போல உணர்வீர்கள்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு சரியாக திட்டமிட வேண்டியது அவசியம். உங்களின் பாதி வேலை முடியும், இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் உறவு செழித்து வளர உங்கள் சஞ்சலமான மனது உகந்ததல்ல. உங்கள் துணையிடம் உங்கள் உள்ளத்தை வெளிபடுத்த முடியாது. இன்று அனுசரணை தேவை.

பணம் இன்று குறைந்து காணப்படும். பண வரவு காணப்பட்டாலும் அதில் திருப்தி இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.




இன்று விரைவான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இதனால் நல்ல வாய்ப்புகளை இழக்காமல் தடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையைத் தரும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து சில தடைகளை எதிர்கொள்ள நேரும்.

எளிய விஷயங்களையும் இன்று கடுமையாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பாரமரிக்க உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். சகஜமாக இல்லாவிட்டால் திருப்தி கிட்டாது.

தேவையற்ற செலவுகளால் உங்கள் பணம் கரையும். சேமிப்பதற்கும் குறைந்த வாய்ப்பே உள்ளது.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்க வேண்டும் எனில் உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை. பாடல்கள் கேட்பது, திரைப்படம் பார்ப்பது உங்களுக்கு நல்லது.

உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும். இதனால் செய்த வேலையையே திரும்ப செய்ய நேரும்.

தகவல் பரிமாற்றத்தில் சில குழப்பங்கள் காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் கடுமையாக உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். விட்டுக் கொடுப்பதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைக்கலாம்.

நிதியைப் பொறுத்தவரை உங்கள் எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கும்.




இன்றைய நாள் அபாரமாக இருக்கும். உங்களின் சிறந்த தகவல் பரிமாற்றம் மூலம் நெருங்கியவர்களின் இதயத்தை தொடுவீர்கள். உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்கள் பணி செய்யும் முறையை மேம்படுத்துவீர்கள்.சக பணியாளர்களுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் உங்கள் துணையை மகிழ்ச்சிப்படுத்தலாம். நீங்கள் பொருத்தமான ஜோடிக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

இன்று வரவு அதிகமாக காணப்படும். இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.




உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை ஆக்க பூர்வமான நாளாக ஆக்கலாம். உறுதி மற்றும் முறையான திட்டமிடல் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம். இன்றைய நாள் பயனுள்ளதாக அமையும்.

இன்று பணியிடத்தில் அபாரமான வெற்றி கிடைக்கும். உங்கள் பணியில் கூடுதல் பலன்களும் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். தகவல்களை சிறந்த முறையில் பரிமாற்றம் செய்வீர்கள். உங்கள் வசீகரமான பேச்சு உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்யும்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சிறப்பான நாள். இன்று சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று சவால்கள் மிகுந்த நாள். எனவே அமைதியாக எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று சூழ்நிலைகளை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று திட்டமிட்டு தொழில் சார்ந்த முறையில் பணியாற்றினால் சிறந்தது.

மனதில் கவலை தரும் எண்ணங்களை வளர்ப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியைத் தக்கவைக்க இந்த உணர்வைத் தவிர்த்தல் வேண்டும்.

பண வரவு திருப்திகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் வருத்தப்படுவீர்கள்.

இன்று முதுகு வலி ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.05.2025




இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாக காணப்படாது. உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் ஆர்வம் குறையும். உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும். முடிவெடுப்பதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும்.

பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும். பணிச் சுமை அதிகமாக காணப்படும். உங்களை தயார் படுத்திக் கொள்வதன் மூலம் வெற்றியை அடையலாம்.

உங்களின் மாறுபடும் மன நிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வை தவிர்த்து அமைதியாக இருங்கள்.

உங்களிடம் குறைந்த அளவு பணமே காணப்படும். பணம் சேர்ப்பதற்கு தடைகள் காணப்படும்.




உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் இன்று உற்சாகம் காணப் படும். மகிழ்ச்சியாக இருக்க இது ஒரு நல்ல வாய்ப்பு. முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் வெற்றியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களிடம் உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். அவர்களின் முழு ஆதரவு கிடைக் கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். உங்களின் இந்த அணுகு முறையால் உங்கள் பிரிய மானவர் மகிழ்ச்சியடைவார்.

இன்று உங்கள் பணத்தேவைகள் பூர்த்தியடையும் நாள். இன்று உங்களுக்கு பெரிய அளவில் பணம் கிடைப்பதற்கான அதிர்ஷ்டமான நாள்.




இன்று அமைதி நிலவும் நாள். உங்களை நிரூபிக்க வாய்ப்பு கிடைக் கும் நாள். உங்கள் விருப்பங்கள் நிறை வேறும் நாள். உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். திறமையுடன திட்டமிட்டு உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

காதல் வயபட்ட உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் பிரியமானவர் உங்களை நேசிப்பார்.

உங்கள் பணம் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இன்று செழிப்பான நிலை காணப்படும்.

இன்று உங்களுக்கு தேவையான ஆற்றல் காணப்படும்.




இன்று முக்கிய முயற்சிகள் கூட சிறந்த பலன்களை அளிக்காது. நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள். பிரார்த் தனை மற்றும் தியானம் மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.

உங்கள் பணியில் ஏமாற்றத்தைக் காண்பீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை முடிப்பதற்கு கவனம் செலுத்துங்கள்.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனை தவிர்த்து நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் அதி கம். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். நிதி நிலைமை செழிப்பாக இருக்காது.

அதிக மன உளைச்சல் காரணமாக நீங்கள் சோர்வாக காணப்படுவீர்கள். தொடை வலியால் அவதிப்படுவீர்கள்.




# யாழ்.சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை இன்று காலையில் சந்நிதியில் ஆரம்பம்

( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் மிக நீண்ட யாழ்ப் பாணம் – கதிர்காமம் பாத யாத்திரை இன்று (01) வியாழக்கிழமை அதி காலை செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகிறது.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திரு கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல ஆகிய 7 மாவட்டங்க ளையும் கடந்து 55 நாள்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இந்தப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிகமிகநீண்ட தூர கதிர்காம பாத யாத்திரையாகக் கருதப்படுகின்றது.

அதன் முன்னோடியாக கடந்த மூன்று நாள்களுக்கு முன்பு யாழ்ப் பாணம் பண்டத்தரிப்பு பிரான்பற்று பெரிய வளவு கந்தசாமி ஆலயத்தி லிருந்து செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தை நோக்கிய ஆரம்ப முன்னோடி பாதயாத்திரை இடம்பெற்றது.

ஜெயா வேல்சாமி தலைமையி லான குழுவினர் நேராக மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலை சென்றடைந்து செல்வச்சந்நிதி ஆலயத்தை வந்த டைந்தனர்.

செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து முறைப்படி கதிர்காமம் நோக் கிய பாத யாத்திரை இன்று வியாழக் கிழமை ஜெயாவேல் சாமி தலைமையில் ஆரம்பமாகிறது.

ஆரம்பத்தில் சுமார் 40 அடியார்கள் பங்குபற்றுகின்றனர். இடைநடுவில் கலந்து கொள்ளும் அடியார்கள் கீழ் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத் துக்கு அழைத்து விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. 0778386381, 0763084791.



# தொழிலாளர் தினம் சிறப்பிதழ்

# உலகமே கொண்டாடும் உழைக்கும் மக்கள் தினம்!

## இன்று மே தினம்!!



நடராஜன் ஹரன்

உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் மே முதலாம் திகதியில் மே தினம் என்றும் தொழிலாளர் தினம் என்றும் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 12 முதல் 18 மணி நேரம் வரை வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது.

குறைந்த வேலை நேரத்துக்காக நடத்தப்பட்ட தொழிலாளர்களின் போராட்டம், மே தினம் உருவாவதற்கு முக்கிய காரணமாய் அமைந்தது. தொழிலாளர்களின் இந்தக் கோரிக்கை மிகப்பெரிய அரசியல் முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அமெரிக்காவில் தொழிற்துறை ஒரு அமைப்பாக வளர்ந்த பொழுது இந்தப் போராட்டம் வெளிப்பட்டது.

இதற்கு எதிரான குரல்கள் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் தொடங்கின. இதில் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் (ஊாயசவளைவள). சாசன இயக்கம் 6 முக்கியக் கோரிக்கைகளை முன்வைத்து தொடர் இயக்கங்களை நடத்தியது. அதில் குறிப்பிடத்தக்கது 10 மணி நேர வேலை என்ற கோரிக்கை.

1830 ஆம் ஆண்டு, பிரான்சில் நெசவுத் தொழிலாளர்கள் தினமும் 15 மணி நேரம் உழைத்து வந்தனர்.

இதனை எதிர்த்து அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 1834 இல் ஜனநாயகம் அல்லது மரணம் என்ற வாசகத்தை முன்வைத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால், இது தோல்வியில் முடிந்தது. ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்னில் கட்டடத் தொழிலாளர்கள் 1856இல் முதன் முதலாக 8 மணி நேர வேலை என்ற கோரிக்கையை முன்வைத்தனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றனர்.

1896ஏப்ரலில்லெனின் மே தினத்துக்காக எழுதிய சிறுபிரசுரத்தில், ரஷ்யத் தொழிலாளர்களின் நிலைமை குறித்து விரிவாக அலசினார். மேலும், ரஷ்யத் தொழிலாளர்களின் பொருளாதாரப் போராட்டம் அரசியல் போராட்டமாக எழுச்சி கொள்ள வேண்டும். என்பதையும் வலியுறுத்தினார். தொழிலாளர்களின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது எனலாம்.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ளதொழிலாளர்இயக்கங்களைஇணைத்து,அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பு என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இந்த இயக்கம் 1886, மே 1 ஆம் நாள் நாடு தழுவிய வேலை நிறுத்தத்துக்கு அறைகூவல் விடுத்தது. இந்த இயக்கமே மே தினம் தோன்றக் காரணமாக இருந்தது எனலாம்.

1889 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசில் சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேசத் தொழிலாளர் நாடாளு மன்றம் கூடியது. 18 நாடுகளிலிருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்று முடிவு செய்தனர்.

1890 மே 1 ஆம் நாள், அனைத் துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட அறைகூவல் விடுக்கப்பட்டது. இந்த அறைகூவலே, மே முதல் நாள் சர்வதேச தொழிலாளர் தினமாக – மே தினமாக வருவதற்குக் காரணமாக அமைந்தது. அடுத்த ஆண்டிலிருந்து உலக நாடுகள் பலவற்றில் விடுமுறையும் அறிவிக்கப்பட்டது.

இந்த நாட்டில் (அமெரிக்காவில்) ஆரம்ப நாள்களில் பல வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தன. ‘அதிக ஊதியம் வேண்டும்’ என்பதுதான் இந்த வேலை நிறுத்தங்களில் முக்கிய கோரிக்கையாக எழுப்பப்பட்டது. இருந்த போதிலும் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வகுத்த போதெல்லாம் குறைந்த வேலை நேரம், சங்கம் சேரும் உரிமை போன்ற பிரச்சினைகளை முன்வைத்தனர். தொழிலாளர்கள் வெகுவாக சுரண்டப்பட்ட காலகட்டம் அது. நீண்ட வேலை நேரங்கள் அவர்களை மேலும் துன்பப் படுத்தின. எனவே வேலை நேரம் குறைக்கப்பட வேண்டும் என்பது கோரிக்கையாக எழுப்பப் பட்டது.



‘அதிகாலை முதல் அந்தி

தொடர்ச்சி ▼



# தொழிலாளர் தினம்
## சிறப்பிதழ்



# உலகமே கொண்டாடும் உழைக்கும் மக்கள் தினம்!

தொடர்ச்சி▲

சாயும் வரை' என்பதுதான் அப்போதெல்லாம் வேலைநாள். இதனால் ஏற்பட்ட மனக்குமுறல்களை அமெரிக்கத் தொழிலாளர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே வெளிக்காட்டினர். பதினாறு, பதினேழு, ஏன் பதினெட்டு மணிநேர வேலை என்பதெல்லாம் அப்போது சாதாரண விடயங்கள்.

1806 ஆம் ஆண்டு பிலடெல்பியா நகரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களின் தலைவர்கள் மீது சதி வழக்கு போடப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின் போதுதான் தொழிலாளர்கள் பத்தொன்பது, இருபது மணி நேரங்கள் வேலை வாங்கப்பட்டார்கள் என்ற விடயம் வெளியே வந்தது.

1820 மற்றும் 30 களில் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று பற்பல வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தன. பத்து மணி நேர வேலை நாள் என்ற கோரிக்கை பல தொழில் மையங்களில் முன் வைக்கப்பட்டது. பிலடெல்பியா நகர இயந்திரத் தொழிலாளர்களின் சங்கம்தான் உலகின் முதற் தொழிற்சங்கமாக கருதப்படுகிறது. இந்தத் தொழிற்சங்கம் உருவான இரு ஆண்டுகளுக்குப் பின்புதான் இங்கிலாந்தில் தொழிற்சங்கங்கள் உருவாகத் தொடங்கின.

பத்து மணி நேர வேலை நாள் என்ற கோரிக்கையை முதன் முதலாக வைத்த பெருமை இந்தச் சங்கத்துக்கே உண்டு.

1827இல் பிலடெல்பியாவில் கட்டடங்கட்டும் தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தில்தான் இந்தக் கோரிக்கை பிரதானமாக வைக்கப்பட்டது. 1834 இல் நியூயோர்க்கில் ரொட்டி தொழிலாளர்கள் எகிப்திய அடிமைகளைக் காட்டிலும் அதிகம் துன்புற்றனர். நாளொன்றுக்கு அவர்கள் பதினெட்டிலிருந்து இருபது மணி நேரம் வேலை செய்ய வேண்டி வந்தது என்ற செய்தியை அப்போது வெளியான 'தொழிலாளருக்காக வாதிடுபவன்' (ுழசமபைஅநஉ'ள யுனஎழஉயவந) என்ற பத்திரிகை வெளியிட்டது. பத்துமணி நேர வேலை நாளுக்கான இப்போராட்டங்கள் விரைவிலேயே ஒரு இயக்கமாக உருவெடுத்தன.

1837 இல் ஏற்பட்ட நெருக்கடி ஒரு தடையாக இருந்தபோதிலும் வேன் பியூரன் தலைமையிலான அரசு, அரச ஊழியர்கள் அனைவருக்கும் பத்து மணி நேர வேலைநாள் அறிவித்தது. எல்லோருக்கும் பத்து மணி நேர வேலை நாள் என்பதற்காக போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. பல தொழிற்சாலைகளில் இந்தக் கோரிக்கை வெற்றியடைய, உடனேயே தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை நாள் என்ற கோசத்தை எழுப்பினர்.

தொழிற்சங்க இயக்கத்தின் அதிவேக வளர்ச்சியால் 1850 களில் இந்தக் கோரிக்கை புதிய உத்வேகத்தை அடைந்தது. 1857 இல் ஏற்பட்ட நெருக்கடி இந்த உத்வேகத்துக்கு ஒரு தடையானது. இருந்தபோதிலும் நன்கு வளர்ச்சி பெற்ற தொழிற்சங்கங்கள் அதற்கு முன்பே இக்கோரிக்கையை அடைந்தன. இவ்வாறு குறைந்த வேலை நேரத்துக்கான போராட்டம் அமெரிக்காவில் மட்டும் நிகழவில்லை. முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்கள் சுரண்டப்பட்ட எல்லா வளரும் நாடுகளிலும் இந்தப் போராட்டங்கள் நிகழ்ந்தன. உதாரணமாக வெகு தூரத்தில் இருந்த ஆஸ்திரேலியாவில் கட்டடத் தொழிலாளர்கள் '8 மணி நேர வேலை, 8 மணி நேர பொழுதுபோக்கு, 8 மணி நேர ஓய்வு' என்ற கோரிக்கையை முன் வைத்து 1858 இல் அதை அடைவதில் வெற்றியும் பெற்றனர்.

1884 இல் அமெரிக்காவில் 8 மணி நேர இயக்கத்தின் போது வெடித்த போராட்டங்கள்தான் மே தினம் உருவாவதற்கு நேரடியான காரணமாய் அமைந்தன. ஆனாலும் இதற்கு ஒரு தலைமுறை முன்பே 'தேசிய தொழிற்சங்கம்' குறைந்த வேலை நேரத்துக்கான கோரிக்கையை முன்வைத்து பரந்த இயக்கத்தையே நடத்தியது. 'தேசிய தொழிற் சங்கம்' அமெரிக்க தொழிலாளி வர்க்கத்தின் போர்க் குணம் மிக்க ஸ்தாபனமாக அப்போது விளங்கியது.

1886 மே முதல் நாள் முதல் சட்டபூர்வமான வேலைநாள் என்பது எட்டு மணி நேரம்தான் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் தொழில் அமைப்புகளின் கூட்டமைப்பு தீர்மானிக்கிறது. எனவே எல்லா தொழிலாளர் அமைப்புகளும் தங்கள் அதிகார வரம்பிற்குரிய இடத்தில் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் இத்தீர்மானத்துக்கு ஏற்ப தங்கள் சங்க விதிகளை அமைத்துக் கொள்ளுமாறு இந்த மாநாடு பரிந்துரைக்கிறது.

எட்டு மணி நேர வேலை நேரத்தை எப்படிக் கொண்டு வருவது என்பது பற்றிக் கூட்டமைப்பு தீர்மானத்தில் ஏதும் சொல்லப்படவில்லை. இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 50,000 இற்கு உட்பட்டது. தங்கள் உறுப்பினர்கள் வேலை செய்யும் கடை, ஆலை, சுரங்கங்களில் போராடி இன்னும் அதிகமான தொழிலாளர்களைத் திரட்ட வேண்டும் என்பதை அது அறிந்திருந்தது. அப்போதுதான் எட்டு மணி நேர வேலைநாளை சட்ட பூர்வமாக்க வேண்டும் என்பதை அறிவிக்க முடியும் என்பதையும் உணர்ந்திருந்தது.

1886, மே முதல் நாள் 8 மணி நேர வேலைக்காக போராடும் தொழிலாளர்களுக்கு உதவும் பொருட்டே "தீர்மானத்துக்கேற்ப சங்க விதிகள் அமைய வேண்டும்" என அறிவித்திருந்தது.

வேலை நிறுத்தத்தின் போது வெகு நாள்கள்

தொடர்ச்சி▼




# உலகமே கொண்டாடும் உழைக்கும் மக்கள் தினம்!

தொடர்ச்சி▲

வெளியே தங்க நேரிடலாம். அப்போது சங்கத்தின் உதவி தேவைப்படும். மேலும் இந்த வேலை நிறுத்தம் தேசிய அளவில் நடைபெறுவதாலும் இணைக்கப்பட்டுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் அமைப்புகளும் கலந்து கொள்வதாலும் அவர்கள் விதிப்படி தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்துக்குத் தங்கள் உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியமாகிறது. இங்கு ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இந்தக் கூட்டமைப்பானது தற்போது உள்ள அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பை போலவே சுயேச்சையாக கூட்டமைப்பு முறையில் ஏற்பட்டது.

இன்று பல தரப்பட்ட நிகழ்வுகள் எமது இலங்கை திருநாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டு இடம் பெற்று வருகின்றன. தற்போது இது அரசியல் கட்சிகளின் விசேட கூட்டங்களாக பரிணமித்துள்ளதைக் காண்கின்றோம். அன்று தொழிலாளர்களுக்காய் குரல் கொடுத்த மேதினம் இன்று அரசியலுக்காய் பயன்படுத்தப்படுகின்றதா எனும் எண்ணத்தில் நோக்கத் தோன்றுகின்றது.

எது எப்படி இருப்பினும் நாம் அனைவரும் எல்லா வற்றையும் மறந்து அனைவரும் தொழிலாளர்கள் எனும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்து இன்றைய இரத்தம் சித்தி போராடிப்பெற்ற இந்த மே தினத்தை தொழிலாளர்களின் எதிர்கால கணவுகளின் கோரிக்கைகள் வெற்றி பெற வாழ்த்தி பிரார்த்திப்போம்.

"உலகில் ஒருவன் முதலாளி மற்றவர் எல்லாம் தொழிலாளி" இதுவே உலக நியதி.

# உழைப்பை மதித்திடுவோம் ஓரணியாய் வாருங்கள்...!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.**

ஊசிமுதல் உணவுவரை உழைப்பால் வருகிறது
உழைக்கின்றார் வாழ்வெல்லாம் உயர்வுபெற மறுக்கிறது
காசுள்ளார் கைகளிலே உழைப்பெல்லாம் போகிறது
கவலையுறும் உழைப்பாளி கண்ணீரில் மிதக்கின்றான் !

சமத்துவங்கள் பேசுகிறார் சங்கங்கள் அமைக்கின்றார்
நினைத்தவுடன் மாநாடு நிறையவே வைக்கின்றார்
அனைத்துமே உழைக்கின்றார் அனுசரணை என்கின்றார்
ஆனாலும் உழைக்கின்றார் அல்லலிலே இருக்கின்றார் !

வியர்வையிலே தொழிலாளி வேதனையில் தொழிலாளி
நலமிழந்து கிடக்கின்றான் நயமெதுவும் காணவில்லை
முதலீட்டும் முதலாளி தலைநிமிர்ந்து நிற்கின்றான்
முழுதுழைக்கும் தொழிலாளி நிலையிழந்து தவிக்க-ின்றான்!

பணமெண்ணும் மனமகன்று மனமெண்ணும் நிலை-லவேண்டும்
உழைப்பதை உயர்வென்று உணர்த்தியே விடவேண்டும்
உழைத்திடுவார் இருப்பிடங்கள் உயரவெண்ணும் உளம்வேண்டும்
உழைப்பாளி முதலாளி ஓரணியாய் வரவேண்டும்!

வளமாக வாழ்வதற்கு வழிசமைக்கும் தொழிலாளி
நிலம்மீது நிம்மதியாய் தலைநிமிர வழிவேண்டும்
வளமீட்டும் முதலாளி மனமகிழ வைத்துவிடும்
வாழ்வளிக்கும் தொழிலாளி வாழும்நாள் வரவேண்டும்!

உழைத்திடும் கைகளென்றும் உயர்வைப் பெறவேண்டும்
உழைப்பை மதித்திடும் உளமது எழவேண்டும்
உழைப்பால் உலகமே உயர்ந்திடும் தன்மையால்
உழைப்பவர் நலத்தை உயர்த்தியே போற்றுவோம்!

உழைப்பை மதிக்கும்நாள் உன்னதமே உலகுக்கு
உழைப்பை மதிக்கும்நாள் உயர்வையே உணர்த்திவிடும்
உழைப்பை மதிக்கும்நாள் உழைப்பாளர் மகிழ்ந்திடுவார்
உழைப்பை மதித்திடுவோம் ஓரணியாய் வாருங்கள் !




# தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கும் காலகட்டத்துக்காக நாம் அணிதிரள்வோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடும் இன்றைய நாளில், நமது நாட்டின் முன்னேற்றத்துக்காக ஓய்வின்றி உழைக்கும் பல்லாயிரக் கணக்கான சகோதர "உழைக்கும் மக்களுக்கு" வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

தொழிலாளர் உரிமைகளை வெறும் தாளில் மட்டுமல்லாமல் உண்மையாகவே பாதுகாக்கும் காலகட்டத்துக்காக நாம் அணிதிரள்வோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1886 மே 4 ஆம் திகதி அமெரிக்காவின் சிகாகோ நகரில் தொழிலாளர்கள் எட்டு மணிநேர வேலை நாளுக்காக நடத்திய போராட்டம் அல்லது 'ஹேமார்க்கெட் போராட்டம்' உலகின் முதல் தொழிலாளர் போராட்டமாகக் கருதப்படுகிறது.

இந்தப் போராட்டமே உலகெங்கிலும் மே தினம் அல்லது தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவதற்கு காரணமாக அமைந்தது. அன்று முதல் உலகெங்கிலும் வாழும் அனைத்து உழைக்கும் மக்களும் மே 1 ஆம் திகதியை உலக தொழிலாளர் தினமாகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

ஒரு நாடாக, நமது நாடும் தற்போது பல பெரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. மக்கள் முறைமையில் மாற்றத்தை எதிர்பார்த்து பெரும் ஆணையுடன் புதிய அரசையும் ஜனாதிபதியையும் தேர்ந்தெடுத்தபோதிலும், தற்போதைய அரசாலும் ஜனாதிபதியாலும் நாட்டின் உழைக்கும் மக்களுக்காக எந்த நேர்மறையான சேவையும் செய்யப்படவில்லை என்பது தெரிகிறது.

முந்தைய அரசும் ஜனாதிபதியும் உருவாக்கிய ஐ.எம்.எவ். ஒப்பந்தத்தின்படி, உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்புச் செய்யும்போது, பெரும் கோடீஸ்வரர்களைப் பாதுகாத்து, உழைக்கும் மக்களின் ஓய்வூதிய நிதிகள் மீது ஏற்படுத்திய பெரும் தாக்கத்துக்குத் தற்போதைய அரசிடமிருந்து இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்காதது ஆச்சரியமான விடயம்.

உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் தற்போதைய அரசும் ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசின்



அடிச் சுவட்டைப் பின்பற்றிச் செயற்படுவதை நமது நாட்டின் உழைக்கும் மக்களுக்குச் செய்த பெரும் அவமரியாதையாகக் கருதுகிறேன்.

அதேபோல், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நமது நாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் மீது விதித்துள்ள 44 விதமான எதிர்வினைத் தீர்வை காரணமாக, நமது நாட்டின் பல ஏற்றுமதித் தொழில்கள் பெரும் ஆபத்தை எதிர்கொள்கின்றன. இந்தத் தீர்வை 90 நாள்களுக்குத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும், ஒருவேளை இந்தத் தீர்வை விதிக்கப்பட்டால், நமது நாட்டின் ஏற்றுமதித் தொழில்கள் சீரழிந்து, பலரது வேலை வாய்ப்புகளும் இழக்கப்படலாம்.

இந்த நிலையில் இந்த முறை நாம் தொழிலாளர் தினத்தை இத்தகைய பல நெருக்கடிகளின் மத்தியில் கொண்டாடுகிறோம்.

எனவே, நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, கட்சி எதிர்க்கட்சி வேறுபாடின்றி நாம் அனைவரும் கைகோர்த்து முதலில் இந்த அனைத்து சவால்களையும் வெற்றி கொள்ள வேண்டும். இல்லையெனில், ஒரு நாடாக, ஒரு தேசமாக நாம் மீண்டும் எழுந்து நிற்க முடியாது.

தொழிலாளர் உரிமைகளை வெறும் தாளில் மட்டுமல்லாமல் உண்மையாகவே பாதுகாக்கும் காலகட்டத்திற்காக நாம் அனைவரும் அணிதிரள்வோம்.- என்றுள்ளது.




# உரிமைகளுக்காகவும், சமத்துவமான சமூக நல்வாழ்வுக்கும் ஒன்றிணைவோம்

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
විශ්වවිද්‍යාල සේවක සංගමය
UNIVERSITY EMPLOYEES UNION
Reg. No: 5276 Tele Phone: 021-2229852 E-mail: uojeujaf@gmail.com Fax: 021-2222294
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் | යාපනය විශ්වවිද්‍යාලය යාපනය | University of Jaffna Jaffna

உரிமைகளுக்காகவும், சமத்துவமான சமூக நல்வாழ்வுக்காகவும் ஒன்றிணைவோம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தனது மேதின அறிக்கையில் அறைகூவல் விடுத்துள்ளது.

இன்றைய மே தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மே தினம் என்பது உலகம் முழுவதும் தொழிலாளர்களின் உரிமைக் குரல்கள், மற்றும் போராட்டங்களை நினைவுகூரும் நாள் மட்டுமல்ல அது எதிர்காலத்தை நோக்கி நியாயமான சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டிய கடமையையும் நினைவூட்டும் நாள்.

எனவே 2025 மே தினத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களாகிய நாம் இலங்கை ஆசிரியர் சங்கம், வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச தொழல் சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து உழைப்பாளர்களின் உரிமைகளையும் சமத்துவமான சமூக நல்வாழ்வையும் முன்னிறுத்தி நிற்கின்றோம்.

தனது உழைப்பால் தன்னையும் சமூகத்தையும் முன்னேற்ற முனைகின்ற, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக உள்ளவர்கள் அனைவரும் உழைப்பாளரே. இன்று உழைப்பாளர்களாகிய நாம் பல அழுத்தங்களுக்கு உள்ளாகி இருக்கிறோம். சமனற்ற வளப்பங்கீடு, மற்றும் மொழி, இனம், மதம், பால் ரீதியான பாகுபாடுகள், புறக்கணிப்புக்கள் பொருத்தமற்ற வேலைச்சூழல், ஊதியக் முரண்பாடுகள், நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்களில் தலையீடுகள், ஆகியவை உழைப்பாளர் நலன்களை கடுமையாக பாதிக்கின்றன.

இவை எம்மோடு இணைந்த சமூகத்தின் ஒவ்வொரு துணைக் கூறுகளிலும் பாரிய தாக்கத்தைத் தினம் தினம் ஏற்படுத்தி வருகின்றன. இதற்கு எதிராக உழைப்பாளர் ஆகிய நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் நாங்கள் காலங்காலமாக அடக்கு முறைகளையும், சுரண்டல்களையும், புறக்கணிப்புக்களையும், அழுத்தங்களையும் சந்தித்து வருகின்றோம்.

நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் ஒடுக்குமுறைகள், அதனால் ஏற்பட்ட வலிகள், போராட்டங்கள், இழப்புக்களுக்குப் பின்னரும் வலிகளை மறக்கும்படியான எந்தவொரு மாற்றத்தையும், நியாயமான தீர்வையும் இன்றுவரை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. மொழி உரிமை, நில உரிமை, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், அரசியல் கைதிகள் விடயம், சட்ட ஆட்சி, தீர்வு வழங்கல், மற்றும் பிரதேச அபிவிருத்தி என்பன இன்னும் இங்கு எமது அவாக்களாகவும், எதிர்பார்ப்புகளாகவுமே காத்திருக்கின்றன. இவற்றை அடைய ஒரே கொள்கையுடன் அனைவரையும் ஓரணியில் ஒன்றுபடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முழு நாடும் கடன் சுமை, பணவீக்கம், தொழில் வாய்ப்பின்மை, உழைப்புக்கேற்ற ஊதியமின்மை, உயர் வாழ்க்கைச் செலவு, அரச கொள்கைகள் மற்றும் சேவைகளில் உள்ள குறைபாடுகள், லஞ்சம், போதைப் பொருள், ஆயுத கலாச்சாரம் போன்றவற்றால் மிகவும் நெருக்கடிக்குள்ளாகி உள்ளது.

இவற்றின் காரணமாக அனைவரும் இன, மத, பிரதேச வேறுபாடின்றிக் கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளோம். இவற்றிலிருந்து விடுபடும் நோக்கோடு அனைவரும் ஒன்றிணைந்து மாற்றத்துக்காகப் புதிய அரசுக்கு ஆணையை வழங்கிய போதும், எதிர்பார்த்த மாற்றங்களோ அல்லது அவற்றின் பயன்களையோ இதுவரை அனுபவிக்க முடியவில்லை எனும் நாட்டு மக்கள் ஒவ்வொருவரதும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

மே தினம் என்பது இன, மத, மொழி பேதமின்றி அனைவரதும் சமத்துவத்தையும், உரிமைகளையும், விடுதலையையும், சமூக நல் வாழ்வையும் வலியுறுத்தும் நாளாகும்.

இந்தத் தினத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்கள் ஆகிய நாம் எமது மக்களின் அபிலாசைகள், நிலைத்த அபிவிருத்தி, சம உரிமை, நியாயமான தீர்வு, அடக்குமுறை அற்ற சமத்துவமான சக வாழ்வு தொடர்பில் எமது முன்னோர் வழி அஞ்சாது தொடர்ந்தும் குரல் கொடுப்போம்.

ஓங்குக தொழிலாளர் ஒற்றுமை! ஓங்குக மக்கள் சக்தி!! ஓங்குக சமத்துவம்!!!.– என்றுள்ளது.




# தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டே இ.தொ.கா. எப்போதுமே செயற்பட்டுள்ளது

## செந்தில் தொண்டமான் மே தின வாழ்த்தில் தெரிவிப்பு

உழைக்கும் வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால் தான் உலகமே மகிழ்ச்சியாக இருக்கும். உலகத் தொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுத்ததன் அடையாளமாக பிரகடனப்படுத்தப்பட்ட மே தினத்தை கொண்டாடும் தொழிலாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள மேதின செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

உலகின் பல்வேறு நாடுகளில், பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற உரிமைகள் மற்றும் வெற்றியை கொண்டாடும் முகமாக மே மாதம் 1 ஆம் திகதியை உலகத் தொழிலாளர்கள் நாளாக கொண்டாடுகிறோம்.

ஒரு நாட்டின் முதுகெலும்பு தொழிலாளர்கள் தான். பாட்டாளி வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால் தான் நாடு வளர்ச்சியடையும். இலங்கையில் பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக போராட்டங்களை நடத்தியுள்ளனர்.



காலனித்துவ ஆட்சிக்காலம் முதல் சுதந்திர இலங்கையிலும்கூடகடுமையானபோராட்டங்கள் ஊடாகவே தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுத்ததுடன்தொழிலாளர்பாதுகாப்பு சட்டங்களும் நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட்டன.

அமரர்களான சௌமிய மூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் தொழிலாளர்களின் உரிமைகளையும் நலன்களையும் அடிப்படையாக கொண்டே அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் செயற்பட்டுள்ளனர்.

அதே வழியில் இ.தொ.கா. தொடர்ந்தும் பயணம் செய்யும். தொழிலாளர்களுக்காக எமது தொழில் சங்க ரீதியான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை நாம் உறுதி செய்யும் அதேவேளை அவர்களின் வாழ்வாதார உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும்.- என்றார்.

# தொழிலாளர் வர்க்கம் உரிமைக்காக போராடிய நினைவுகளை உயர்த்திப் பிடிக்கும் நாள் இன்று!

## சமூக செயற்பாட்டாளர் உதுமான்கண்டு நாபீர்

(பாறுக் ஷிஹான்)



உழைக்கும் மக்களின் மகிழ்ச்சியான வாழ்வே எமது இலட்சியமாகும். உழைக்கும் மக்களாகிய உங்கள் அனைவரதும் மகிழ்ச்சியும் நிம்மதியுமான வாழ்வுக்காக நாம் என்றும் ஓயாது பயணிக்கும்.

உழைக்கும் மக்களாகிய உங்களனை வருக்கும் மே தின வாழ்த்துக்களை கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் என சமூக செயற்பாட்டாளர் உதுமான்கண்டு நாபீர் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ரஷ்யா என்று பல தேசங்களிலும் ஆடை மற்றும் இரும்புத் தொழிற்சாலைகள் சார்ந்து பெரும் முதலாளிகள் உருவாகத் தொடங்கினர்.

இந்த முதலாளிகள், கூலித் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து ஈவிரக்கமற்ற முறையில் வேலை வாங்கினர். நாள் ஒன்றுக்கு சுமார் 15 மணி நேரத்துக்கும் மேலாக தொழிற்சாலைகளில் மக்கள் அடிமைகளாக வேலை செய்ய வேண்டியிருந்தது.

இந்த நிலைமையை மாற்றுவதற்காக தொழிலாளர்கள் நடத்திய பல்வேறுபட்ட போராட்டங்களின் விளைவாகவே நாளொன்றுக்கு 8 மணி நேர வேலை என்பதை இவ்வுலகம் படிப்படியாக ஏற்றுக் கொண்டது.

இந்த உரிமையை வென்றெடுப்பதற்காக நடத்தப்பட்ட போராட்டங்களும் கைதுகளும் சிறைக் கொடுமைகளும் உயிரிழப்புகளும் சொல்லிமாளாதவை. அந்த நினைவுகளை முன்வைத்தே மே முதல் நாளை தொழிலாளர் தினமாக நாம் அனுஷ்டித்து வருகிறோம். அவைகளெல்லாம் கடந்த நூற்றாண்டு கதைகள். ஆனால் இன்றும் கூட நமது தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பு சுரண்டப்படுவது முடிந்த பாடில்லை.

எமது மாகாணத்தை எடுத்துப் பாருங்கள். இங்கு நிறைந்து வாழும் விவசாயிகளும், மீனவர்களும் நாளும் பொழுதும் உழைத்து உழைத்து ஓடாய் தேய்ந்து போகின்றனர். எப்படித்தான் உழைத்தாலும் ஏழ்மை அவர்களை விட்டபாடில்லை.

இதற்கு காரணமென்ன? சுரண்டல். மூலதனத்தைக் கையில் வைத்திருக்கும் முதலாளிகள் எமது மக்களின் உழைப்பை வியாபாரம் எனும் பெயரில் உறுஞ்சிக் கொண்டிருக்கின்றார்கள். அது மீனாக இருக்கலாம். நெல்லாக இருக்கலாம். வெள்ளரிக்காயாக இருக்கலாம். ஆடு, மாடுஃ கோழியாக கூட இருக்கலாம். அனைத்திலும் கொள்ளை இலாபம் தலைவிரித்தாடுகிறது.

வியாபாரம் என்பது எமது மக்களின் கையில் இல்லை. இவை குறித்தெல்லாம் நாம் தீவிரமாக கவனம் கொண்டுள்ளோம்.- என்றுள்ளது.




# தொழிலாளர் வர்க்கத்தினரின் உரிமைகளை ஜே.வி.பி. மதிக்க மே தினம் வழிகோலட்டும்!

## மேதின வாழ்த்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

இடதுசாரி பாரம்பரிய கட்சியாக தன்னை அடையாளப் படுத்திக் கொள்ளும் ஜே.வி.பி., நாட்டின் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் உரிமைகளை மதித்து நடப்பதற்கும் ஒடுக்கப்பட்ட தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளை மதித்து நடப்பதற்கும் இந்த மேதினம் வழிகோலட்டும்.

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தனது மேதின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மே தினத்துக்கு வாழ்த்துத் தெரிவித்து அவர் விடுத்தி ருக்கும் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் வாழும் பாட்டாளி வர்க்க மக்களுக்கும் சர்வதேச பாட்டாளி வர்க்க தோழர்களுக்கும் உலகின் ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களுக்கும் இலங்கை தமிழ் தேசிய இன மக்களுக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உழைப்பாளர் தின வாழ்த்துகள்.

இலங்கையைப் பொறுத்தவரையில் உழைக்கும் வர்க்கத்தின் காவலனாகத் தன்னைக் காட்டிக்கொள் ளும் ஜனதா விமுக்தி பெரமுண என்றழைக்கப்படும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி யிருக்கின்றது.

அரச உத்தியோகத்தர்களின் சம்பள அதிகரிப்பு, தேயிலை தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் உழைக்கும் வர்க்கத்தினருக்கான இன்னோ ரன்ன சலுகைகள் பற்றித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதுடன் நாட்டில் தங்களது ஆட்சியில் தேனாறும் பாலாறும் ஓடும் என்று கூறினார்கள்.

ஆனால் ஆட்சிப்பீடமேறி அரையாண்டு கடந்த பின்னரும் தோட்டத் தொழிலாளர்கள் எந்த நிவாரண முற்ற ஏதிலிகளாகவே இன்னமும் இருக்கின்றனர். அதனைப் போலவே தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாள தோழர்களுக்கும் எதுவித ஊதிய உயர்வோ பணிப்பாதுகாப்புத் திட்டங்களோ கிடைக்கவில்லை.

இந்த லட்சணத்தில்தான் இலங்கையில் முதலாவ தாக ஆட்சிப் பீடமேறிய இடதுசாரி மார்க்சிய லெனினிய வாதிகளின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றது.

இந்த நாட்டின் தொழிலாள வர்க்கத்தினரின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படவில்லை என்பதுடன் புரையோடிப்போ யிருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள்கூட இவர்களால் மேற்கொள்ளப்படவில்லை.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் அனைவரும் வடக்கு - கிழக்குக்கு வரும்போது ஒரு மந்திரத்தை உச்சாடனம் செய்கிறார்கள். தாங்கள் இனவாதம், மதவாதம், சாதிவாதம் என்பனவற்றுக்கு எதிராக இருப்பதாகவும் ஏதோ தமிழ் மக்கள்தான் அவற்றை உயர்த்திப் பிடிப்பதாகவும் ஒரு பிரமையை உருவாக் கப்பார்க்கிறார்கள்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிகளுக்கு அடுத்ததாக 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியின் போதும் 1988-89 ஜே.வி.பியின் கிளர்ச்சி யின்போதும் தமிழ் மக்களுக்கு விரோதமான கொள்கை களையும் கோட்பாடுகளையும் முன்வைத்து இன வாதிகளாக நடந்துகொண்டவர்களே ஜே.வி.பி. தரப்பினர்.

சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத் தீயை உருவாக் கிப் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான கலவரங்களை உரு வாக்கி, நூற்றுக் கணக்கில் ஆயிரக் கணக்கில் அவர் களைக் கொன்றொழித்து ஏதிலிகளாக்கி, அவர்களை அவர்களது சொந்த இடங் களிலிருந்து விரட்டியடித்த முழுப்பங்கும் சிங்கள ஆளும் வர்க்கத்தையும் அவர்களது கூட்டத்தையுமே சாரும்.



தங்களது குறுகிய அரசியல் இலாபங்களுக்காகத் தேர்தல் வெற்றிகளுக்காகத் தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறுபட்ட சட்டங்களை உருவாக்கி அதன் மூலம் இனவாதத்தைத் தூண்டி வளர்த்தவர்கள் சிங்கள ஆளும் தரப்பினர். அதில் இன்றுள்ளவர்களும் அடக்கம்.

சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவாத செயற் பாடுகளைக் கண்டித்தும் தமிழ் மக்களின் அபிலாசை களை நிறைவேற்றும் முகமாகவும் தமிழர் தரப்பு தமது கோரிக்கைகளை வைப்பதானது எந்த சந்தர்ப்பத் திலும் இனவாதமாகாது. அதற்காக குரல்கொடுப்பதோ, பேசுவதோ, எழுதுவதோ இனவாத செயற்பாடாக அமைய மாட்டாது.

எனவே, சிங்கள மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப் பட்டுள்ள இனவாதத் தீயிலிருந்து சிங்கள மக்களை மீட்டெடுப்பதற்கு ஜே.வி.பி. அவர்களுக்கு ஆலோசனை சொல்ல வேண்டும் அதற்கு முன்பாக தாங்கள் விட்ட தவறுகளுக்குத் தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோரி தங்களை சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டும்.

தேர்தலில் வெல்வதற்காக மட்டும் தங்களை இன, மத, சாதி, பேதமற்றவர்களாகக் காட்டிக்கொள்ள முனைவது வெற்று ஆரவாரக் கூச்சலாக இருக்குமே தவிர, அதில் எந்தவொரு ஆக்க பூர்வமான பொருளும் இருக்காது.

தமிழ் மக்களின் ஆதரவுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வென்று வந்திருக்கின்றவர்கள் இப்பொழுதாவது தங்களை சுயவிமர்சனம் செய்து திருத்திக்கொள்ளாவிட்டால் ஒருபோதும் அவர்கள் திருந்த மாட்டார்கள்.

நாட்டில் இனவாதத்தைத் தோற்றுவித்தவர்கள் சிங்கள ஆளும் வர்க்கத்தினரே. எனவே அவர்கள் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வையும் முன்வைக்க வேண்டும். அதற்கு தாங்கள் இதுவரைகாலமும் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகத் தூண்டிவிட்ட இனவாதக் கருத்துக்களுக்கு மன்னிப்பு கோருவதுடன், அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்குத் தாங்களே காரணம் என்பதை மக்கள் மன்றத்தில் ஏற்றுக்கொண்டு இனி ஒருபோதும் அத்த கைய தவறுகள் இடம்பெறாது என்ற உத்தரவாதத்தை அளித்து இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் அச்ச மின்றி வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது சிங்கள தலைமைகளின் தலையாய கடமையாகும்.

இந்த மேதினம் என்பது உழைக்கும் வர்க்கம் தங்க ளது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள உந்து சக்தி யாக இருக்கட்டும் என்பதுடன் ஜே.வி.பி. போன்றோர் தம்மை சுயவிமர்சனம் செய்து சீர்திருத்திக் கொள்ளவும் உகந்ததாக இருக்கட்டும்.- என்றுள்ளது.




# பெரும் சவாலுக்கு மத்தியில் நடக்கிறது இந்த வருட சர்வதேச தொழிலாளர் தினம்

## ஐக்கிய சமாதான கூட்டமைப்பு உப தலைவர் ஹக்கீம் செரீப்



உலகவாழ் உழைக்கும் சமூகம் மிகப்பெரும் சவாலை எதிர்கொள்ளும் நேரத்தில், இந்த வருட சர்வதேச தொழிலாளர் தினம் நினைவு கூறப்படுகின்றது. நமது நாட்டில் கடந்த வருடங்கள் பாரிய சவாலுக்கு உள்ளாகியதும் தொழிலாளர் வர்க்கமே ஆகும்.

அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு விடாமுயற்சியுடன் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த உறுதி பூண்டவர்களும் அவர்கள்தான்.

இவ்வாறு ஐக்கிய சமாதான கூட்டமைப்பு உப தலைவர் ஹக்கீம் செரீப் மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாளுக்கு நாள் அவர்கள் மீதான அழுத்தங்கள் தற்போது அதிகமாக உள்ளன. அதிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கும் நிலவுகின்ற சிக்கலான நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கும் பல்வேறு அணுகு முறைகளை உரிய தரப்பு மேற்கொண்டு வருகின்றது.

கடந்த 139 ஆண்டுகளுக்கு முன்பு இதே மே 1 ஆம் திகதி அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஒன்று கூடிய தொழிலாளர்கள் 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பரித்தனர். அன்றைய ஆட்சியாளர்களின் அடக்குமுறையால் தொழிலாளர் தலைவர்கள் பலர் உயிர்த் தியாகம் செய்தனர்.

இந்த உரிமையை வென்றெடுப்பதற்காக நடத்தப்பட்ட போராட்டங்களும் கைதுகளும் சிறைக் கொடுமைகளும் உயிரிழப்புகளும் சொல்லிமாளாதவை.

அந்த நினைவுகளை முன்வைத்தே மே முதல் நாளை தொழிலாளர் தினமாக நாம் அனுஷ்டித்து வருகிறோம். அவை எல்லாம் கடந்த நூற்றாண்டு கதைகள். ஆனால் இன்றும் கூட நமது தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பு சுரண்டப்படுவது முடிந்த பாடில்லை.

உழைக்கும் மக்களுக்காக அரசியலை ஒதுக்கி வைத்து விட்டு, போராட்டத்தை மக்கள் சார்பான புரட்சிகர மாற்றத்துடன் நேர்மறையான திசையில் கொண்டு செல்ல ஒன்றிணையுமாறும் உழைக்கும் மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

உலகளாவிய தொழிலாளர் சக்தியான தொழிலாளர் சகோதரத்துவத்தை உருவகப்படுத்தும் உலக தொழிலாளர் தினத்தை கொண்டாடுவதில் நான் உங்களுடன் இணைந்துகொள்வது அந்த அபிலாஷைகளுடனேயே ஆகும்.

ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக உழைக்கும் மக்கள் நடத்தி வரும் போராட்டத்தைத் தீவிரமாக்க ஆண்டுதோறும் மே முதல் நாளை உழைக்கும் மக்களின் உரிமை தினமாக, உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமை நாளாக கொண்டாட வேண்டும் என அறை கூவி அழைத்தது.

அந்த வகையில் இலங்கையிலும் உலகலாவிய ரீதியிலும் கொண்டாடப்படும் மே தினமானது இன்று கொண்டாடப்படுகிறது. அவர்கள் தங்களது உரிமைகளை பாதுகாக்கும் வகையில் குரல் எழுப்பும் நாளாக மே முதலாம் அமைய வேண்டும். – என்றுள்ளது.

# உழைக்கும் மக்களின் உழைப்புக்கு பெறுமதி வழங்கும் நாள் மே தினம்

## உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் முப்தி



மனித நாகரீகமானது இயற்கையின் சவால்களை கண்டு அஞ்சாத மனித உழைப்பினாலேயே உருவாக்கப்பட்டது என்று உலமா கட்சித்தலைவரும் ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரசின் ஸ்தாபக தலைவருமான முபாறக் அப்துல்மஜீத் முப்தி தனது மே தின வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேதின வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அனைத்து குடிமக்களின் முன்னேற்றத்துக்காகவும் இரவு பகல் பாராது பாடுபடும் அன்பான உழைக்கும் மக்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உழைக்கும் மக்கள் முழு சமூகத்துக்கும் ஆற்றிவரும் சேவைக்கு நன்றி பாராட்டும் நோக்கில் மே தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

உழைக்கும் மக்களின் உழைப்புக்குப் பெறுமதி வழங்கும், அவர்களின் நலனுக்காக குரல் கொடுக்கும், அது தொடர்பிலான ஆக்கபூர்வமாக ஊடாடல்களை மேற்கொள்ளும் ஓர் தினமாக மே தினம் அமைந்துள்ளது. சமூகத்தின் மேம்பாட்டுக்காகத் தனது வியர்வையை அர்ப்பணிக்கும் தொழிலாளர் தோழர்களின் தினமே இன்றாகும்.

தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் வேறு நோக்கங்களை முன்னிலைப்படுத்தாது, தொழிலாளர்களின் நலனை உறுதி செய்ய கூடுதல் முனைப்பு காட்ட வேண்டும்.

இதன் மூலம் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி நாட்டுக்கே நன்மை ஏற்படும். அதற்காக உழைக்கும் மக்களின் மகத்தான அர்ப்பணிப்பை சர்வதேச தொழிலாளர் தினமான இன்றைய தினத்தில் மிகுந்த மரியாதையுடன் நினைவு கூருகிறேன்.– என்றுள்ளது.